புகழ் பெற்ற
புதிர்க் கதைகள்

பேராசிரியர் எ.சோதி
தமிழ்த்துறை
தாகூர் கலைக் கல்லூரி
புதுச்சேரி - 605 008

நன்மொழிப் பதிப்பகம்
41, கங்கை வீதி, வசந்த் நகர்,
புதுச்சேரி - 605 003.

RangaRakes
tamilnavarasam.com

பொருளடக்கம்

1. சரியாய்ச் சொல்வார் சாலமன் 5
2. விந்தையான விலங்கு 7
3. டயோடலசின் அறிவுக் கூர்மை 8
4. சாலமனின் அறிவுரை 11
5. ஆயுளை இரட்டிக்க எளிய வழி 15
6. யாருக்கு உரியவள்? 18
7. தியாகத்திற்குப் போட்டி 21
8. சோதிடமா? மந்திரமா? வீரமா? 26
9. தலையை மாற்றில் நிலையே மாறும் 29
10. யார் நுட்பமானவர்? 32
11. மென்மையானவர் யார்? 34
12. அரசனுக்குத் திருமணம்! அமைச்சனுக்கு மரணம்! 36
13. ஏன் அழுதான்? ஏன் சிரித்தான்? 40
14. எது அரிய செயல்? 43
15. நான்கு முட்டாள்கள் 44
16. என்ன முறை சொல்லி அழைப்பது? 45
17. மூன்று தட்டில் நால்வர்க்கு விருந்து 47
18. யார் மணமகன்? 47
19. இருவர்க்கும் ஒரே சாட்சி 48
20. பேயை விரட்ட எளிய வழி 50
21. காலையில் செய்தால் தப்பு! மாலையில் செய்தால் உவப்பு! 53
22. சிக்கலுக்கு மேல் சிக்கல் 54
23. விடாக்கண்டனும் கொடாக்கண்டனும் 58
24. புகழ்ச்சியா? இகழ்ச்சியா? 60
25. இளவரசியை மணப்பது யார்? 61
26. கடுக்கண் திருடியது யார்? 63
27. உண்மையான அரசன் 64
28. கடலைக் கண்டு அஞ்சியவன் 65
29. எப்படி இறப்பது? 67
30. எவ்வளவு நேரம் ஆகும்? 68
31. தங்கினால் நீ! இல்லையேல் மனைவி! 70
32. காலக் கெடு மீறினால் உயிரைக் கொடு 72
33. துப்பினால் துப்பு கிடைக்கும் 75
34. மகிழ்ச்சியோடு சென்ற அரசன் 76
35. தீர விசாரிப்பதே மெய் 77
36. எப்படிக் கண்டுபிடித்தான்? 80
37. பிள்ளையாரைப் பிடிக்காத சனீசுவரன் 82
38. நெடுந் தூரம் குறுகல் ஆகுமா? 84
39. பரிசும் வேண்டும்! தரவும் கூடாது! 87
40. கரிகாலன் வழங்கிய தீர்ப்பு 90

விடைகள் 92

புகழ் பெற்ற புதிர்க் கதைகள்

1. சரியாய்ச் சொல்வார் சாலமன்

வெகு காலத்திற்கு முன் கிரேக்க நாட்டைச் சாலமன் என்ற அரசர் ஆண்டு வந்தார். சிறந்த அறிஞரான அவருடைய புகழ் உலகெங்கும் பரவி இருந்தது.

சாலமனுடைய அறிவைச் சோதனை செய்ய விரும்பினாள் எகிப்து நாட்டு அரசி சீபா. பல நாட்கள் பயணம் செய்து கிரேக்க நாட்டை அடைந்தாள்.

சாலமனும் சீபாவைச் சிறப்பாக வரவேற்றார்.

அழகிய பூந்தோட்டத்தால் சூழப் பெற்ற அரண்மனையில் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

"எப்படிப்பட்ட சிக்கலாக இருந்தாலும் தீர்க்கக் கூடியவர் என்று உலகம் உங்களைப் புகழ்கிறது. உங்கள் அறிவை நான் சோதிக்கலாமா?" என்று கேட்டாள் சீபா.

RangaRakes tamilnavarasam.com

''சரி'' என்றார் சாலமன்.

சீபா தன் அருகே நின்றிருந்த பணிப் பெண்ணைப் பார்த்தாள். குறிப்பு அறிந்த அந்தப் பணிப் பெண் தன் பையிலிருந்து மூன்று மலர்களை எடுத்தாள். அருகே இருந்த மேசையின் மேல் அவற்றை வைத்தாள்.

மூன்று மலர்களும் அளவிலும் வண்ணத்திலும், அழகிலும் ஒரே மாதிரி இருந்தன. அவற்றிற்குள் எந்த வேறுபாடும் தெரியவில்லை.

''அரசே! இந்த மூன்றில் ஒன்றுதான் உண்மையான மலர். ஏனைய இரண்டும் போலிகள். நீங்கள் இங்கே இருந்தபடியே மூன்றில் எது உண்மையான மலர் என்று கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்?'' என்றாள் சீபா.

சாலமன் அந்த மூன்ற மலர்களையும் நன்றாக உற்றுக் கவனித்தார். அவரால் எந்த வேறுபாட்டையும் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

தன் அருகே இருந்த வீரனிடம் ''நல்ல காற்று வரட்டும். கன்னல்களைத் திறந்து விடு'' என்றார்.

வீரனும் எல்லாச் சன்னல்களையும் திறந்து விட்டான். குளிர்ந்த காற்று உள்ளே வீசியது.

நீண்ட நேரம் மலர்களையே பார்த்துக் கொண்டிருந்த சாலமன், ''நடுவில் இருக்கும் மலரே உண்மையானது. மற்றவை போலிகள்'' என்றார்.

இதைக் கேட்ட அரசி வியப்பு அடைந்தாள்.

உண்மையான மலரைக் கண்டுபிடித்த முறையைச் சாலமன் விளக்கினார். அவரது அறிவுக் கூர்மையைச் சீபா பெரிதும் பாராட்டினாள்.

உண்மையான மலர் எது என்று சாலமன் எப்படிக் கண்டுபிடித்து இருப்பார்?

2. விந்தையான விலங்கு

முன்னொரு காலத்தில் கிரேக்க நாட்டில் தேபெசு என்ற நகரம் சீரும் சிறப்புமாக விளங்கியது. அந்த நகருக்குள் செல்ல ஒரே ஒரு சாலைதான் இருந்தது. சாலையின் இரு மருங்கிலும் மலைகளும் குன்றுகளும் இருந்தன.

அங்கிருந்த பெரிய மலை உச்சியில் திடீரென்று ஒரு நாள் ஸ்பிங்ஸ் என்ற பூதம் வந்து அமர்ந்தது. பெண்ணின் தலை, பறவையின் இறக்கைகள், சிங்கத்தின் உடலோடு காட்சியளித்த அந்தப் பூதம் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது.

அந்த வழியே யார் வந்தாலும் அவர்களை அந்தப் பூதம் மடக்கிப் புதிர் போட்டது. புதிரை விடுவிக்க முடியாமல் திணறும் போது அவர்களை விழுங்கியது. இப்படிப் பூதத்தால் கொல்லப் பட்டவர்கள் எண்ணற்றவர்கள்.

இதனால் தேபெசு நகரத்திற்கு வருவோரும் போவோரும் குறைந்தனர். அங்கே இருந்தவர்களும் பூதத்திற்கு அஞ்சியபடியே வாழ்ந்தனர்.

RangaRakes

tamilnavarasam.com

பக்கத்து நகரத்தில் ஈடிபசு என்ற இளைஞன் இருந்தான். வாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட அவன் என்ன நிகழ்ந்தாலும் நிகழட்டும் என்ற எண்ணத்தில் தேபெசு நகரத்தை நோக்கி வந்தான்.

அவனை மடக்கிய ஸ்பிங்ஸ் பூதம், ''நான் போடும் புதிரை நீ விடுவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நான் இந்த மலையிலிருந்து கீழே குதித்து இறந்து விடுவேன். இல்லையேல் உன்னை விழுங்கி விடுவேன்'' என்றது.

''புதிரைச் சொல்'' என்றான் ஈடிபசு.

''காலையில் நான்கு கால், நண்பகலில் இரண்டு கால், மாலையில் மூன்று கால். இப்படி உலகில் உலவும் விலங்கு எது?'' என்று புதிரைப் போட்டது ஸ்பிங்ஸ்.

சிறிது சிந்தனை செய்த ஈடிபசு சரியான விடையைச் சொன்னான்.

இதைக் கேட்ட அந்தப் பூதம் மலை உச்சியில் இருந்து கீழே விழுந்து இறந்தது.

ஈடிபசு சொன்ன அந்த விந்தையான விலங்கு என்னவாக இருக்கும்?

3. டயோடலசின் அறிவுக் கூர்மை

முன்னொரு காலத்தில் கிரேக்கத்தின் ஒரு பகுதியாக இருந்த கிரீட் நாட்டை மீனோசு என்ற மன்னன் ஆண்டு வந்தான். சிறந்த அறிவியல் அறிஞனான டயோடலசு என்பவன் அம்மன்னனிடம் பணி புரிந்து வந்தான்.

ஒரு நாள் டயோடலசை அழைத்தான் மன்னன். யாரும் எளிதில் தப்ப முடியாதபடி சுழல் வழிப் பாதைகள் நிறைந்த சிறை ஒன்றைக் கட்டித் தர வேண்டும்'' என்றான்.

டயோடலசும் தன் அறிவுத் திறமை முழுமையும் பயன்படுத்திச் சிறை ஒன்றைக் கட்டி முடித்தான்.

மன்னனிடம் சென்ற அவன் 'அரசே! நானே இதற்குள் சிக்கிக் கொண்டாலும் என்னால் வழி கண்டுபிடித்துத் தப்பி வர முடியாது. அவ்வளவு சிக்கலாக இந்தச் சிறையை அமைத்து உள்ளேன்'' என்றான்.

மகிழ்ந்த அரசனும் அவனுக்குப் பெரும் பொருள் பரிசாகத் தந்தான்.

நாட்கள் பல ஓடின. டயோடலசின் மீது ஏனோ ஐயம் கொண்டான் அரசன். அந்தச் சிறைக்கு உள்ளேயே டயோடலசையும் அவன் மகனையும் சிறை வைத்தான். டயோடலசு எந்தப் பொருளைக் கேட்டாலும் அவனுக்குத் தருமாறு வீரர்களுக்குக் கட்டளை இட்டான்.

வான் வழியாகப் பறந்து சென்றுதான் இந்தச் சிறையில் இருந்து தப்பிக்க முடியும் என்பதை உணர்ந்தான் டயோடலசு.

வீரர்களிடம் கேட்ட பொருள்களைக் கொண்டு செயற்கை இறக்கைகள் செய்தான். அவனும் அவன் மகனும் அந்த இறக்கைகளைப் பொருத்திக் கொண்டு பறவைகள் போலப் பறந்து அந்நாட்டை விட்டுச் சென்றனர்.

RangaRakes

tamilnavarasam.com

டயோடலசும் அவன் மகனும் கடல் மேல் பறந்து கொண்டிருந்தனர். சோர்வு அடைந்த மகனால் பறக்க முடியவில்லை. கடலில் விழுந்து இறந்து விட்டான். டயோடலசு மட்டும் எப்படியோ சிசிலி நாட்டை அடைந்தான்.

டயோடலசின் பெருமையை உணர்ந்த சிசிலி மன்னன் அவனைத் தன் நாட்டிலேயே தங்க அனுமதித்தான்.

டயோடலசு தப்பி விட்டதை அறிந்த மீனோசு கடுங்கோபம் கொண்டான். அவனை எப்படிக் கண்டுபிடிப்பது என்று சிந்தித்தான்.

இரு பக்கமும் மிகச் சிறிய துளையிட்ட பெரிய சங்கு ஒன்றைத் தயார் செய்தான். பெரிய படையுடன் ஒவ்வொரு நாடாகப் பயணம் செய்து இறுதியில் சிசிலி நாட்டை அடைந்தான்.

வழக்கம் போல அந்த அரசனிடமும் சங்கைக் காட்டினான், ''இந்தச் சங்கில் உள்ள இரண்டு துளைகளுக்கு இடையே நூலைக் கோர்த்துத் தர முடியுமா?'' என்று கேட்டான்.

அந்தச் சங்கை வாங்கிப் பார்த்தான் சிசிலி மன்னன். அந்தத் துளைக்குள் எறும்பு மட்டுமே செல்ல முடியும் என்பதை அறிந்தான். ''காலையில் வாருங்கள், இந்தச் சங்கிற்குள் நூல் கோர்க்கப்பட்டு இருக்கும்'' என்றான்.

மறுநாள் காலையில் நூல் கோர்க்கப்பட்ட சங்கை மீனோசிடம் தந்தான் சிசிலி மன்னன்.

RangaRakes

'இதைச் செய்யக்கூடிய அறிவுள்ளவன் டயோடலசு ஒருவன்தான். அவன் இங்குதான் இருக்கிறான்' என்பதை உணர்ந்தான்.

டயோடலசைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு மீனோசு கேட்டான். ஆனால் சிசிலி மன்னனோ அதற்கு மறுத்து விட்டான்.

இருவருக்கும் நிகழ்ந்த போரில் மீனோசு கொல்லப் பட்டான்.

டயோடலசு எப்படிச் சங்கின் துளைக்குள் நூலைக் கோர்த்து இருப்பான்?

4. சாலமனின் அறிவுரை

ஒரு நாள், சாலமனைச் சந்திப்பதற்காக இரண்டு இளைஞர்கள் குதிரையில் வந்தனர். இதற்கு முன் அறிமுகம் இல்லாத அவர்கள் இருவரும் விரைவில் நண்பர்களாகி விட்டனர்.

முதலாமவன் தன் நண்பனைப் பார்த்து, ''என் மனைவி பெரிய அடங்காப் பிடாரியாக இருக்கிறாள். அவளிடம் அன்பு செலுத்திப் பார்த்தேன். அப்போதும் அவள் திருந்த வில்லை. அடித்து உதைத்துப் பார்த்து விட்டேன். அதனாலும் எந்தப் பயனும் விளையவில்லை. அவளை எப்படி நல்வழிக்குக் கொண்டு வருவது என்று சாலமனிடம் அறிவுரை கேட்பதற்காக வந்துள்ளேன்'' என்றான்.

அதற்கு இரண்டாமவன், ''நான் பெருஞ்செல்வன். ஊராரை எல்லாம் வரவேற்று அவர்களுக்குச் சிறப்பாக

tamilnavarasam.com

விருந்து அளிப்பதிலேயே என் பணம் முழுவதையும் செலவு செய்தேன். ஆனாலும் என்னிடம் உண்மையாக அன்பு செலுத்துபவர் யாருமே இல்லை. இது குறித்துச் சாலமனின் அறிவுரையைக் கேட்பதற்காக வந்தேன்'' என்றான்.

இருவரும் சாலமனைச் சந்தித்தனர். இருவர் சிக்கல்களையும் கேட்டார் சாலமன்.

முதலாமவனைப் பார்த்து, ''வாத்துப் பாலத்திற்குப் போ'' என்றார். அடுத்தவனைப் பார்த்து ''அன்பாக இரு'' என்றார்.

இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவரிடம் விடைபெற்ற இருவரும் குதிரையில் அமர்ந்து வாத்துப் பாலத்தை அடைந்தனர்.

அப்போது அந்தக் குறுகிய பாலத்தின் வழியாக வந்த ஒரு கழுதை பாதையிலேயே படுத்து விட்டது. கழுதைக்காரன் அதை எழுப்ப முயன்றும் அது எழுந்திருக்க மறுத்து விட்டது. கோபம் கொண்ட அவன் தடியால் அதன் தலையிலும் முதுகிலும் ஓங்கி அடித்து அதை எழுப்ப முயன்றான்.

இதைக் கண்ட முதலாம் இளைஞன் அவனைப் பார்த்து, ''பாவம்! ஏன் அந்தக் கழுதையை இப்படி அடிக்கிறாய்? அடித்தே அதைக் கொன்று விடுவாய் போல் இருக்கிறதே'' என்று கேட்டான்.

''உங்கள் குதிரையின் குணம் உங்களுக்குத்தான் தெரியும் அது போல் என் கழுதையின் குணம் எனக்குத்தான் தெரியும்'' என்று சொல்லிவிட்டு முன்னிலும் கோபத்தோடு கழுதையை அடித்தான்

RangaRakes

அவன். கடைசியாகக் கழுதை எழுந்து ஓடத் தொடங்கியது. அவனும் வெற்றியோடு அதைப் பின் தொடர்ந்தான்.

நடந்ததை எல்லாம் பார்த்த முதலாமவன் தன் நண்பனிடம், ''இப்போது என் மனைவியை வழிக்குக் கொண்டுவர என்ன செய்ய வேண்டும் என்று விளங்கி விட்டது. நீ என்னுடன் வா, என் வீட்டில் சாப்பிட்டுவிட்டுப் பிறகு உன் ஊர் செல்லலாம்'' என்றான்.

சில நாட்கள் பயணத்திற்குப் பின் இருவரும் முதலாமவன் வீட்டை அடைந்தனர்.

தன் மனைவியிடம் முதலாமவன், ''இவன் என் ஆருயிர் நண்பன். நான் சொல்கிறபடி விதவிதமான உணவு வகைகளைச் சமைத்து விருந்து வை'' என்றான்.

கணவனின் மாற்றத்தை அறியாத அவளோ தன் விருப்பம் போலச் சமைத்தாள், இருவருக்கும் பறிமாறினாள்.

''என்ன சமைக்க வேண்டும் என்று உனக்கு நான் சொல்ல வில்லையா? ஏன் அப்படிச் சமைக்கவில்லை?'' என்று கோபத்துடன் கேட்டான் அவன்.

''என் விருப்பம் போலத்தான் சமைப்பேன். பிடித்தால் சாப்பிடுங்கள். இல்லாவிட்டால் வைத்து விடுங்கள்'' என்று ஆணவமாகப் பதில் சொன்னாள் அவள்.

இதைக் கேட்ட கணவன், ''நண்பா! நான் சாலமனின் அறிவுரையைச் சோதித்துப் பார்க்கப்

tamilnavarasam.com

போகிறேன். உன்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. நீ சிறிது நேரம் வெளியே சென்று உலாவி விட்டு வா'' என்றான்.

அதற்கு நண்பன், ''நான் இங்கேயே இருக்கிறேன். ஆனால் உன் வழியில் நான் குறுக்கிட மாட்டேன்'' என்றான்.

உடனே அவன் ஓர் உறுதியான தடியைக் கையில் எடுத்தான். தன் மனைவியை நையப் புடைக்கத் தொடங்கினான். முதலில் அவள் கூச்சல் போட்டாள். பிறகு ''என்னையா அடிக்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன்? பார்'' என்று கத்தினாள். ஆனால் எதற்கும் அவன் மசியவில்லை. அவளை விடாது அடித்துக்கொண்டே இருந்தான்.

வேறு வழி காணாத அவள் அழுது புலம்பிக்கொண்டே 'இனி என்றுமே உங்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்க மாட்டேன்'' என்று உறுதிமொழி தந்தாள். அவனும் அடிப்பதை நிறுத்தினான்.

பொழுது விடிந்தது. உடல் வலியோடு மெல்ல வந்த அவன் மனைவி, ''இன்று என்ன சமைக்க வேண்டும்?'' என்று பணிவாகக் கேட்டாள்.

அவள் கணவனும் என்னென்ன செய்ய வேண்டும் என்று சொன்னான்.

என்ன வியப்பு! அவன் சொன்னபடியே விதவிதமான உணவு வகைகள் சுவையாகச் சமைக்கப்பட்டு இருந்தன. இருவரும் உண்டு மகிழ்ந்தனர்.

RangaRakes

நண்பனிடம் விடை பெற்ற இரண்டாமவன் தன் ஊர் திரும்பினான். சாலமன் 'அன்பாக இரு' என்ற அறிவுரையை எதற்காகத் தனக்குச் சொன்னார், என்பது அவனுக்குப் புரியவில்லை.

தன் ஊரில் இருந்த பெரியவர் ஒருவரை அணுகி நடந்ததை எல்லாம் விளக்கமாகச் சொன்னான்.

அந்தப் பெரியவர் சாலமன் தந்த அறிவுரைக்குச் சரியான விளக்கம் தந்தார்.

அவர் தந்த விளக்கம் என்னவாக இருக்கும்?

5. ஆயுளை இரட்டிக்க எளிய வழி

ஒரு நாள், தேவர் உலகத்தில் ஊர்வசிக்கும் அரம்பைக்கும் நாட்டியப் போட்டி நடந்தது. யார் வென்றவர் யார் தோற்றவர் என்று அறிய இயலாதபடி இருவருமே மிகச் சிறப்பாக ஆடினார்கள். வெற்றி பெற்றவர் யார் என்று சொல்ல முடியாமல் இந்திரன் குழம்பினான்.

அப்பொழுது அங்கு வந்த நாரதர், ''இந்தச் சிக்கலைத் தீர்க்கும் அறிவு உடையவன் மண்ணுலக அரசன் விக்கிரமாதித்தனே. அவனை இங்கு அழைத்து வந்தால் நல்ல தீர்ப்பு வழங்குவான்'' என்றார்.

இந்திரனும் விக்கிரமாதித்தனை விமானத்தில் தேவர் உலகிற்கு அழைத்து வரச் செய்தான்.

நடந்தவற்றைக் கேட்ட விக்கிரமாதித்தன், ''நாளை இருவரையும் மீண்டும் என் முன் நாட்டியம் ஆடச் சொல்லுங்கள்'' என்றான்.

tamilnavarasam.com

மறுநாள் காலையில் அவை கூடியது. நாட்டியக் கோலத்தோடு வந்த அரம்பையும் ஊர்வசியும் விக்கிரமாதித்தனை வணங்கினார்கள். அவன் அவர்களிடம் ஆளுக்கு ஒரு பூச் செண்டைத் தந்தான்.

''இன்றைய நாட்டியத்தில் நீங்கள் இருவரும் இந்தப் பூச் செண்டைக் கையில் பிடித்தபடியே ஆட வேண்டும்'' என்று சொன்னான்.

நாட்டியப் போட்டி தொடங்கியது. இலக்கண முறை வழுவாமல் மிக அழகாக விறுவிறுப்புடன் இருவருமே ஆடிக் கொண்டிருந்தனர். அவையில் இருந்தவர்கள் தங்களை மறந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று அரம்பை தன் கையில் பிடித்திருந்த பூச் செண்டைத் தூக்கித் தரையில் எறிந்தாள். அரங்கம் எங்கும் பரபரப்பு ஏற்பட்டது.

எழுந்த விக்கிரமாதித்தன், ''நாட்டியத்தில் சிறந்தவள் ஊர்வசியே'' என்று தீர்ப்பு வழங்கினான்.

இதைக் கேட்ட இந்திரன், ''ஊர்வசியே சிறந்தவள் என்று எதனால் கூறினீர்?'' என்று கேட்டான்.

அதற்கு விக்கிரமாதித்தன், 'நான் மலர்ச் செண்டுகள் இரண்டின் உள்ளேயும் உயிருள்ள தேளை வைத்துக் கட்டி இருந்தேன். அரம்பை மலர்ச் செண்டை இறுக்கமாகப் பிடித்து இருந்ததால் அதற்குள் இருந்த தேள் வெளியே வந்து அவளைக் கொட்டி விட்டது. அவளும் மலர்ச் செண்டை எறிந்து விட்டாள். மென்மையாகப் பிடித்து நாட்டியம் ஆடிய ஊர்வசியைத் தேள் ஒன்றும் செய்யவில்லை.

RangaRakes

அதனால்தான் ஊர்வசியே சிறந்தவள் என்று தீர்ப்பு வழங்கினேன்'' என்றான்.

மகிழ்ச்சி அடைந்த இந்திரன் விக்கிரமாதித்தனைப் பாராட்டினான். ''நீ இங்கு வந்ததன் நினைவாக முப்பத்து இரண்டு பதுமைகள் உடைய இந்த அழகிய அரியணையை உனக்குப் பரிசாகத் தருகிறேன். நீ இதில் அமர்ந்து ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்யும் வரமும் தந்தேன்'' என்று அவனை அனுப்பி வைத்தான்.

நாடு திரும்பிய விக்கிரமாதித்தன் நடந்ததை எல்லாம் தம்பி பட்டியிடம் சொன்னான்.

அதற்குப் பட்டி, ''ஆயிரம் ஆண்டுகள் வாழும் வரத்தை நீர் மட்டும் பெற்றுக் கொண்டீரே. என்னை மறந்து விட்டீரே?'' என்றான்.

'ஐயோ! தம்பிக்கும் இப்படி ஒரு வரத்தைப் பெறாமல் வந்து விட்டேனே' என்று வருந்தினான் விக்கிரமாதித்தன்.

இதைக் கண்ட பட்டி, ''அண்ணா! போனது போகட்டும். நம் குல தெய்வமான காளியம்மனைத் தொழுது அவள் அருளால் நீண்ட வாழ்நாளை வரமாகப் பெற்றுத் திரும்புவேன்'' என்றான்.

சில நாட்கள் கழித்துத் திரும்பிய பட்டி அண்ணனிடம் ''காளியம்மன் எனக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் வாழும் வரத்தைத் தந்தாள்'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

இதைக் கேட்ட விக்கிரமாதித்தன், ''நான் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வேன். நீயோ இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்வாய், எப்படி இருந்தாலும் நாம்

tamilnavarasam.com

ஒருவரை ஒருவர் பிரிந்து நீண்ட காலம் உயிர் வாழ வேண்டும். இதுதான் விதி போலும்'' என்று வருத்தத்துடன் சொன்னான்.

அதற்குப் பட்டி, ''அண்ணா! விதியை மதியால் வெல்லலாம். நான் சொல்கிறபடி செய்யும். நீரும் இரண்டாயிரம் ஆண்டுகள் என்னைப் போலவே வாழலாம்'' என்றான்.

தம்பியின் அறிவுரையைக் கேட்ட விக்கிர மாதித்தனும் அவனைப் போலவே இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான்.

பட்டி சொன்ன அறிவுரை என்னவாக இருக்கும்?

6. யாருக்கு உரியவள்?

முன்னொரு காலத்தில் பொன்னி ஆற்றங் கரையில் அருள் நம்பி என்ற உழவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரே மகள். அவள் பெயர் மலர்விழி. அவள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து திருமணப் பருவம் அடைந்தாள்.

மலர்விழியின் பேரழகைப் பற்றிக் கேள்விப்பட்ட மூன்று இளைஞர்கள் அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த ஊருக்கு வந்தனர்.

மூன்று பேருமே தனித்தனியாக அருள் நம்பியைச் சந்தித்தார்கள். ''எனக்குத்தான் உங்கள் மகளைத் திருமணம் செய்து வைக்க வேண்டும். வேறு

யாருக்காவது மணம் செய்து வைத்தால் நான் இறந்து விடுவேன்'' என்று உறுதியாகச் சொன்னார்கள்.

இதைக் கேட்ட அருள் நம்பிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மூவரில் யாருக்கு மலர்விழியைத் திருமணம் செய்தாலும் மற்ற இருவரும் இறந்து விடுவார்கள். அந்தப் பாவம் நம்மைத்தானே சேரும் என்று நினைத்தான். அதனால் தன் மகளுக்குத் திருமணம் செய்வதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்.

எப்படியும் தான்தான் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்ற எண்ணத்தில் மூன்று இளைஞர்களும் அந்த ஊரிலேயே தங்கி விட்டனர்.

திடீரென்று நோய்வாய்ப்பட்ட மலர்விழி இறந்து விட்டாள். அவள் உடலை ஊரார் சுடுகாட்டிற்குத் தூக்கிச் சென்று எரித்தார்கள். தங்கள் எண்ணம் நிறைவேற வில்லையே என்று மூன்று இளைஞர்களும் சோகத்தில் மூழ்கினர்.

மூவரும் சுடுகாட்டிற்குச் சென்றனர். அவர்களில் முதலாமவன் எரிந்து கிடந்த மலர்விழியின் சாம்பலைத் திரட்டினான். அதைத் தன் குடிசைக்கு எடுத்து வந்து தன் படுக்கையின் மீது பரப்பினான். நாள்தோறும் அதன் மேலே படுத்து உறங்கினான்.

இரண்டாமவனோ மலர்விழியின் எலும்புகளை எல்லாம் சேர்த்தான். ''என் காதலியின் உயிர் மேல் உலகை அடைய வேண்டும். அதற்காக இந்த எலும்பை எல்லாம் புனித ஆற்றில் முழுக்காட்டி விட்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

RangaRakes tamilnavarasam.com

மூன்றாம் இளைஞனோ உள்ளம் உடைந்து துறவியாகி ஒவ்வொரு ஊராக அலைந்து கொண்டிருந்தான்.

துறவுக் கோலத்திலிருந்த அவனை ஓர் அந்தணன் தன் வீட்டிற்கு விருந்து உண்ண அழைத்தான். அவனும் ஒப்புக் கொண்டு அந்தணனுடன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அப்போது அந்தணனின் மனைவி சமைத்துக் கொண்டிருந்தாள். அருகே நின்றிருந்த அவள் குழந்தை அழுது அடம்பிடித்துக் கொண்டிருந்தது. பொறுமை இழந்த அவள் தன் குழந்தையைத் தூக்கி எரியும் அடுப்பில் போட்டாள். துடிதுடித்த அக்குழந்தை உடனே இறந்து விட்டது. ஆனால் அவளோ எதுவுமே நடவாதது போலச் சமைத்துக் கொண்டிருந்தாள்.

இதைப் பார்த்த இளந்துறவி திகைத்தான். 'ஐயோ! அரக்கியின் வீட்டிற்கு அல்லவா வந்திருக்கிறேன். என்ன கல் மனம் இவளுக்கு? இங்கு சாப்பிடுவதே பெரும் பாவம்' என்று நினைத்த அவன் வெளியே செல்ல எழுந்தான்.

துறவியின் எண்ணத்தை அறிந்த அந்தணன், ''என் மனைவிக்கு இறந்தவரை மீண்டும் உயிர்ப்பிக்கும் சஞ்சீவினி மந்திரம் தெரியும். அதனால் குழந்தை தொல்லை தரும் போது இப்படித்தான் அடுப்பில் தூக்கிப் போடுவாள். வேலை எல்லாம் முடிந்த பிறகு மீண்டும் உயிர்ப்பிப்பாள்'' என்று சொன்னான்.

வியப்பு அடைந்த இளந்துறவி அந்தப் பெண்ணிடம் இருந்து இறந்தவரை உயிர்ப்பிக்கும் சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுக் கொண்டான்.

காதலிக்கு உயிர் கொடுத்து அவளை மணந்து மகிழ்ச்சியாக வாழலாம் என்று ஊர் திரும்பினான். எலும்புகளை எடுத்துச் சென்ற இரண்டாம் இளைஞனும் அப்பொழுது அங்கு வந்து சேர்ந்தான். இருவரும் சாம்பலைப் பாதுகாப்பாக வைத்து இருந்தவனின் இல்லம் சென்றனர்.

மூவரும் மலர்விழியை உயிர்ப்பிக்கும் முயற்சியில் இறங்கினர். முதலாமவன் அவளது சாம்பலைத் திரட்டிக் கொண்டு வந்தான். இரண்டாமவன் எலும்புகளை அதில் வைத்தான். மூன்றாமவன் சஞ்சீவினி மந்திரத்தைச் சொன்னான். உடனே மலர்விழி உயிர் பெற்றாள்.

அவளைக் கண்ட மூவரும் அவள் தனக்குத்தான் மனைவியாக வேண்டும் என்று சண்டை போடத் தொடங்கினர்.

மூவரில் யார் அவளை மனைவியாகப் பெறும் உரிமை உடையவர்? ஏன்?

7. தியாகத்திற்குப் போட்டி

முன்னொரு காலத்தில் முத்துத் தீவை அன்பு வளவன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அறிவும் வீரமும் நிறைந்தவனாக விளங்கினான். வழக்கம் போல அரியணையில் வீற்றிருந்தான். சிறந்த வீரனைப் போலத் தோற்றம் அளித்த ஒருவன் அவன் முன் வந்து பணிவாக வணங்கினான்.

''நீ யார்? இங்கு எதற்காக வந்துள்ளாய்?'' என்று கேட்டான் அரசன்.

RangaRakes
tamilnavarasam.com

"அரசே! என் பெயர் வீர நிலவன். என் குடும்பத்துடன் இந்த நாட்டிற்கு வந்துள்ளேன். உங்களைப் பாதுகாக்கும் வீரனாகப் பணி புரிய விரும்புகிறேன்" என்றான்.

வீர நிலவனின் தோற்றத்தையும் பேச்சையும் கண்டு அவன் மீது மதிப்புக் கொண்டான் அரசன். அரண்மனையில் இரவு நேரக் காவலனாக வைத்துக் கொண்டான்.

ஒரு நாள் நள்ளிரவு நேரம், கோட்டைக்கு வெளியில் இருந்து பெண் ஒருத்தியின் அழுகுரல் அரசனின் காதில் விழுந்தது. திகைத்த அவன் காவலிருந்த வீர நிலவனைப் பார்த்து, "அந்தப் பெண் யார்? ஏன் அழுகிறாள்? அறிந்து வா" என்றான்.

அரசனின் கட்டளையை ஏற்ற வீர நிலவன் அழுகுரல் வந்த திசையை நோக்கிச் சென்றான். என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய ஆவல் கொண்ட அரசனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

கோட்டைக்கு வெளியே இருந்த சுடுகாட்டில் தலைவிரி கோலமாகப் பெண்ணொருத்தி அழுது ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

அவளை நெருங்கிய வீர நிலவன்,"அம்மா! நீங்கள் யார்? ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் இந்த நாட்டைக் காக்கும் காவல் தெய்வம், இன்னும் மூன்று நாட்களில் இந்த நாட்டு அரசன் இறந்து விடப் போகிறான். அதை எண்ணித்தான் அழுகிறேன்" என்றாள்.

திகைத்த வீர நிலவன், "அம்மா! அரசரைக் காப்பாற்ற ஏதேனும் வழி உள்ளதா? இருந்தால் சொல்லுங்கள். என் உயிரைக் கொடுத்தும் அவரைக் காப்பாற்றுவேன்" என்றான்.

அதற்கு அந்த பெண் "உன் ஒரே மகனைக் காளி தேவிக்குப் பலி கொடுத்தால் அரசன் மேலும் நூறு ஆண்டுகள் உயிர் வாழ்வான்" என்றாள்.

மகிழ்ந்த வீர நிலவன் விரைந்து தன் வீட்டிற்குச் சென்றான். மனைவியை எழுப்பி நடந்தவற்றை எல்லாம் சொன்னான். மகனைப் பலி கொடுக்க அவளும் ஒப்புக் கொண்டாள்.

இருவரும் மகனை எழுப்பினார்கள். "அரசனின் நல்வாழ்விற்காக நீ உயிர் துறக்க வேண்டும்" என்றார்கள்.

அவனும் நம்மை இதுவரை காப்பாற்றி வந்த அரசருக்காக மகிழ்ச்சியோடு உயிரினைத் தருவதாகச் சொன்னான். பேச்சுக் குரல் கேட்டு வீர நிலவனின் மகளும் விழித்துக் கொண்டாள்.

நடந்த நிகழ்ச்சிகளை அரசனும் மறைந்திருந்து கவனித்துக் கொண்டு இருந்தான்.

வீர நிலவன் தன் குடும்பத்துடன் காளிதேவி கோவிலுக்குள் சென்றான். தேவியின் முன்பு மண்டியிட்டு வணங்கிய அவன் மகன் "அம்மா! தாயே! என் உயிரை எடுத்துக் கொள். அதற்குப் பதில் எங்கள் அரசர் பல்லாண்டு வாழ அருள் செய்" என்று வேண்டினான்.

"இந்தப் பலி அரசர் உயிரைக் காக்கட்டும்" என்று கூறியபடி மகனின் தலையை வெட்டி வீழ்த்தினான்

RangaRakes
tamilnavarasam.com

வீர நிலவன். அண்ணனின் தலை உருண்டதைக் கண்ட தங்கை அங்கேயே நெஞ்சு வெடித்து இறந்து விழுந்தாள்.

''இனி நானும் உயிர் வாழ்வதில் பயன் இல்லை. என் குழந்தைகளின் உடலோடு தீக்குள் பாய்ந்து உயிர் விடப் போகிறேன். அனுமதி தாருங்கள்'' என்று அழுதாள் வீர நிலவனின் மனைவி.

வேறு வழி காணாத வீர நிலவன் மரக் கட்டைகளைக் கொண்டு அங்கேயே தீ வளர்த்தான். மனைவி அவன் கால்களில் வீழ்ந்து வணங்கினாள். பிறகு தீயை வலம் வந்து, ''காளிதேவியே! அரசர் நீண்ட ஆயுள் பெற என் உயிரையும் எடுத்துக் கொள்'' என்ற சொல்லிவிட்டுத் தன் மக்களின் உடலோடு தீக்குள் பாய்ந்தாள்.

''அரசர்க்குச் செய்ய வேண்டியதைச் செய்து விட்டேன். மனைவி மக்களை இழந்த பின் இனி நான் உயிர் வாழ்வதில் பயன் இல்லை'' என்று தன் தலையை வாளால் வெட்டிக் கொண்டு அங்கேயே இறந்து வீழ்ந்தான் வீர நிலவன்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த அரசனின் உள்ளம் உடைந்து விட்டது. வீர நிலவனும் அவன் குடும்பத்தினரும் செய்த தியாகத்தை நினைத்துப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கி விட்டன.

'என் ஓர் உயிருக்காக இத்தனை உயிர்கள் பலி ஆவதா?' என்று நினைத்தான். தன் வாளை உருவிய அவன், ''காளிதேவியே! என் உயிரைத் தருகிறேன். இறந்து கிடக்கும் இவர்களுக்கு மீண்டும் உயிர் கொடு'' என்று தன் தலையை வெட்டிக் கொள்ள முயன்றான்.

அப்போது, ''அரசனே! அவசரப்படாதே! இறந்து கிடக்கும் இவர்கள் சிறிது நேரத்தில் உயிர் பெறுவார்கள் நீயும் நீண்ட காலம் வாழ்வாய்'' என்று தேவியின் குரல் ஒலித்தது.

அரசன் அரண்மனைக்குத் திரும்பினான்.

இறந்து கிடந்த வீர நிலவனும் அவன் இல்லத்தினரும் சிறிது நேரத்தில் உயிர் பெற்று எழுந்தனர். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி மகிழ்ந்தனர்.

மறுநாள் காலையில் அரியணையில் வீற்றிருந்த அரசன் வீர நிலவனை அழைத்தான். ''நேற்றிரவு கேட்ட பெண்ணின் அழுகுரலுக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

தன் தியாகத்தைக் கூற விரும்பாத வீர நிலவன், ''அரசே! அழுதது யார் என்று தெரியவில்லை. நான் அங்கே போவதற்குள் அவள் மறைந்து விட்டாள்'' என்று நடந்ததை மறைத்துக் கூறினான்.

மகிழ்ந்த அரசன் எல்லோரும் அறியும்படி நேற்றிரவு நடந்த நிகழ்ச்சிகளை விளக்கமாகச் சொல்லி வீர நிலவனைப் பெருமைப் படுத்தினான்.

அவையில் இருந்தவர்களால் இவர்களில் யாருடைய தியாகம் மிகச் சிறந்தது என்ற முடிவுக்கு வர இயலவில்லை.

யாருடைய தியாகம் மிகச் சிறந்தது? நீங்கள் சொல்லுங்கள்.

RangaRakes
tamilnavarasam.com

8. சோதிடமா? மந்திரமா? வீரமா?

வெகு காலத்திற்கு முன் மதிவாணன் என்பவர் குமரி நாட்டின் அமைச்சராக இருந்தார். அவருக்கு அறச் செல்வன், எழிலரசி என்ற மக்கள் இருந்தனர். எழிலரசி மணப் பருவம் அடைந்தாள்.

அவள் பெற்றோரும் தமையனும் அவளுக்கு யாரைத் திருமணம் செய்து வைப்பது என்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சில் குறுக்கிட்ட எழிலரசி, ''நான் ஒரு வீரனையோ அல்லது சோதிடனையோ அல்லது மந்திரவாதியையோதான் மணப்பேன். வேறு யாருக்கேனும் என்னை மணம் செய்ய முயன்றால் நான் இறந்து விடுவேன். இது உறுதி'' என்றாள்.

இதைக் கேட்ட மூவரும் அன்றிலிருந்து எழிலரசிக்குத் தகுதியான கணவனைத் தேடும் முயற்சியில் இறங்கினர்.

ஒரு நாள், அரசு வேலையாகப் பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் மதிவாணன். அப்பொழுது அவரை இளைஞன் ஒருவன் சந்தித்தான்.

''உங்கள் மகளின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டே இங்கு வந்துள்ளேன். அவளை எனக்கு மணம் செய்து வைக்க வேண்டும்'' என்று வேண்டினான்.

அவன் அழகிலும் பணிவிலும் மகிழ்ந்த மதிவாணன், ''நீ யார்? சொல்'' என்றார்.

''நான் ஒரு மந்திரவாதி. உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள்? உடனே நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றான்.

''நான் விரைவில் பாண்டிய நாடு செல்ல வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்'' என்றார் அவர்.

உடனே அந்த இளைஞன் சில மந்திரங்களைச் சொன்னான். அழகான தேர் ஒன்று அங்கே வந்து நின்றது. இருவரும் அதில் ஏறி அமர்ந்தனர். அந்தத் தேர் வான் வழியாகப் பறந்து சென்று விரைவில் பாண்டிய நாட்டை அடைந்தது. தன் மகளை அவனுக்கே தருவதாக உறுதி சொன்னார் அவர்.

வெளியூர் சென்றிருந்த எழிலரசியின் அண்ணன் பெரிய வீரன் ஒருவனைச் சந்தித்தான். ''என் தங்கையை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்'' என்றான் வீரனும் எழிலரசியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டு அதற்கு ஒப்புக் கொண்டான்.

மதிவாணனின் மனைவியோ தன் மகளைச் சோதிடனான மற்றோர் இளைஞனுக்குத் திருமணம் செய்வதாக உறுதி தந்திருந்தாள்.

மதிவாணன், அவன் மனைவி, மகன் மூவரும் சந்தித்தனர். ஒவ்வொருவரும் தாங்கள் எழிலரசிக்குத் தகுதியான கணவனைத் தேர்ந்தெடுத்து இருப்பதைச் சொன்னார்கள். அவளை யாருக்குத் திருமணம் செய்து தருவது என்ற குழப்பம் அவர்களுக்குள் எழுந்தது.

மூன்று இளைஞர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். ஒவ்வொருவரும் எனக்குத்தான் எழிலரசியைத் திருமணம் செய்து தர வேண்டும் என்று

RangaRakes
tamilnavarasam.com

வற்புறுத்தினார்கள். யாரும் மற்றவர்க்கு விட்டுத் தரத் தயாராக இல்லை.

திடீரென்று ஒரு நாள் எழிலரசி காணாமல் போய் விட்டாள். எங்கே தேடியும் கிடைக்கவில்லை.

மூன்று இளைஞர்களையும் அழைத்த மதிவாணன் ''உங்களில் என் மகளைத் திரும்பக் கொண்டு வருபவர் யாரோ அவரே என் மகளைத் திருமணம் செய்து கொள்ளலாம்'' என்றார்.

அதைக் கேட்ட மூன்று இளைஞர்களும் ஒன்று கூடிச் சிந்தித்தார்கள். சோதிட இளைஞன் தன் சோதிடத் திறமையால் அரக்கன் ஒருவன் எழலரசியைத் தூக்கிச் சென்றிருப்பதையும் ஆயிரம் கல் தொலைவில் உள்ள மலை உச்சியில் சிறை வைத்திருப்பதையும் சொன்னான்.

உடனே மந்திரவாதியான இளைஞன் வானத்தில் பறக்கும் தேர் ஒன்றை வரச் செய்தான். வீரனான இளைஞன் அந்தத் தேரில் ஏறி அமர்ந்து அரக்கனின் இருப்பிடம் அடைந்தான். கடுமையாகப் போரிட்டு அரக்கனைக் கொன்று எழிலரசியைத் தேரில் ஏற்றிக் கொண்டு மதிவாணன் இல்லம் அடைந்தான்.

எழிலரசி உயிரோடு மீண்டதை அறிந்த அனைவரும் மகிழ்ந்தனர்.

மூன்று இளைஞர்களுமே, 'தன்னால்தான் எழிலரிசி மீட்கப் பட்டாள் என்றும் எனவே அவளைத் தனக்குத்தான் மணம் செய்து தர வேண்டும்' என்று வாதிட்டனர். மீண்டும் குழப்பம் ஏற்பட்டது.

மூவரில் யாருக்கு எழிலரசியைத் திருமணம் செய்து வைக்க வேண்டும்?

RangaRakes

9. தலையை மாற்றில் நிலையே மாறும்

நெடுங் காலத்திற்கு முன் கபாடபுரம் என்ற நகரம் இருந்தது. அதன் நுழைவாயிலில் அம்மன் கோயில் ஒன்று இருந்தது. ஆண்டுதோறும் அங்கே திருவிழா நடைபெற்றது. அவ்விழாவைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.

ஒருமுறை அத்திருவிழாவைக் காண நெல்வேலியைச் சேர்ந்த அறவாணன் என்பவன் வந்தான். அங்கு பூங்கோதை என்ற அழகியைக் கண்டு காதல் கொண்டான். அவளைப் பற்றிய செய்திகளைப் பிறர் வாயிலாகக் கேட்டு அறிந்தான்.

'மணந்தால் அவளை மணப்பது. இல்லையேல் இறப்பது' என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

அம்மனை வணங்கிய அவன் ''அப்பெண் எனக்கு மனைவியாக வர அருள் செய். அவளோடு ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும். பதிலுக்கு என் தலையையே உனக்குப் பலி தருகிறேன்'' என்று வேண்டிக் கொண்டான்.

அதன்பின் அவன் தன் ஊர் திரும்பினான். பூங்கோதையைப் பற்றித் தன் தாயிடம் சொன்னான்.

அவன் தாயும் திருமண முயற்சியில் இறங்கினாள். மணப் பேச்சு நடந்தது. ஒரு நல்ல நாளில் அறவாணனுக்கும் பூங்கோதைக்கும் திருமணம்

tamilnavarasam.com

நடந்தது. இருவரும் இன்பமாக இல்வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் பூங்கோதையின் அண்ணன் நெல்வேலிக்கு வந்தான். தங்கையும் மைத்துனனும் அவனைச் சிறப்பாக வரவேற்று விருந்து அளித்தனர்.

''இந்த ஆண்டு எங்கள் ஊரில் நடக்கும் அம்மன் திருவிழாவைக் காண உங்களை அழைக்க வந்தேன். விழா தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே நாம் அங்கே செல்ல வேண்டும்'' என்றான்.

மைத்துனனின் அழைப்பை ஏற்றான் அறவாணன். மூவரும் கபாடபுரம் நோக்கிப் பயணம் ஆனார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு கபாடபுரம் அவர்களுக்குக் காட்சி தந்தது. நடந்த களைப்புத் தீர வழியில் இருந்த மர நிழலில் மூவரும் அமர்ந்தார்கள். எதிரிலிருந்த அம்மன் கோவிலைக் கண்டதும் அறவாணனுக்குத் தான் திருமணத்திற்கு முன் வேண்டிக் கொண்டது நினைவுக்கு வந்தது.

தன் மனைவியிடமும் மைத்துனனிடமும் ''நான் கோவிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று உள்ளே சென்றான். அங்கிருந்த வாளை எடுத்துத் தன் தலையை வெட்டிக் கொண்டான்.

நீண்ட நேரமாகியும் அறவாணன் திரும்பாததைக் கண்ட பூங்கோதையின் அண்ணன் கோயிலுக்குள் சென்றான். அங்கே உடல் வேறு தலை வேறாகக் கிடக்கும் மைத்துனனைக் கண்டு திடுக்கிட்டான். தன் தங்கையிடம் எப்படி இச்செய்தியைச் சொல்வது என்று

வருந்திய அவனும் அதே வாளால் தன் தலையை வெட்டிக் கொண்டு இறந்தான்.

தன் கணவனும் அண்ணனும் திரும்பாததைக் கண்டு பொறுமை இழந்தாள் பூங்கோதை. என்ன நடந்தது என்பதை அறிய கோயிலுக்குள் நுழைந்தாள். அங்கே தன் கணவனும் அண்ணனும் இறந்து கிடப்பதைக் கண்டு அலறினாள்.

'இனிமேல் வாழ்வதில் பயன் இல்லை' என்ற முடிவுக்கு வந்தாள் அவள். அம்மனை வணங்கிய அவள் ''மறு பிறப்பிலும் இவர்களே எனக்குக் கணவனாகவும் அண்ணனாகவும் வர வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள். அங்கே கிடந்த வாளை எடுத்துத் தன் கழுத்தை வெட்டிக் கொள்ள முயன்றாள்.

அப்போது, ''மகளே! அவசரப்படாதே! இறந்து கிடக்கும் இவர்கள் உடலோடு தலையைப் பொருத்தினால் மீண்டும் உயிர் பெறுவார்கள்'' என்று காளியின் குரல் ஒலித்தது.

பூங்கோதை மகிழ்ச்சி அடைந்தாள். உடனே அவர்கள் உடலோடு தலையைப் பொருத்தினாள். இருவரும் உயிர் பெற்று எழுந்தனர்.

அப்பொழுதுதான் பூங்கோதைக்குப் பரபரப்பில் கணவனின் உடலில் அண்ணன் தலையையும் அண்ணனின் உடலில் கணவன் தலையையும் பொருத்தி விட்ட தவறு தெரிந்தது.

இப்பொழுது இருவரில் யார் அவளுக்குக் கணவனாக வேண்டும்? யார் அண்ணனாக வேண்டும்?

RangaRakes
tamilnavarasam.com

10. யார் நுட்பமானவர்?

நெடுங் காலத்திற்கு முன் தென்றல் நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவனுடைய அவைக்கு மூன்று இளைஞர்கள் வந்தனர். "நீங்கள் யார்? இங்கே எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டான் அரசன்.

"அரசே! நாங்கள் மூவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான நுட்பமான உணர்வு உள்ளது. யார் உணர்வு சிறந்தது என்பதை அறிவதற்காகவே இங்கு வந்துள்ளோம்" என்றான் அவர்களில் மூத்தவன்.

"உங்களில் யார் யார் எத்தகைய நுட்பமான உணர்வு உடையவர் சொல்லுங்கள்?" என்று கேட்டான் அரசன்.

"அரசே! நான் உணவில் நுட்பமான உணர்வு உடையவன். அடுத்தவன் பெண்களைப் பற்றிய நுட்பமான உணர்வு உடையவன். மற்றவன் படுக்கை பற்றிய நுட்பமான உணர்வு உடையவன்" என்றான் முதலாமவன்.

'அப்படியா?" என்று வியந்த அரசன் மூவரையும் சோதித்துப் பார்க்க விரும்பினான்.

அரசன் மூன்றாமவனை அழைத்தான். ஒரு கட்டிலின் மேல் ஏழு பட்டு மெத்தைகளை அடுக்கி அதன் மேல் படுக்கச் சொன்னான். அவனும் படுத்தான்.

RangaRakes

சிறிது நேரத்தில் முதுகில் ஏதோ கடித்து விட்டதைப் போல் அலறிக் கூச்சலிட்டு எழுந்தான் அவன், சோதித்த வீரர்கள் அவன் முதுகில் முடியால் கிழிக்கப் பட்டதைப் போன்ற காயத்தைக் கண்டார்கள்.

இதை அறிந்த அரசன் அந்தக் கட்டிலை ஆராயச் சொன்னான். வீரர்கள் ஏழாவது மெத்தையின் அடியில் கிடந்த தலை முடி ஒன்றை அரசனிடம் காட்டினார்கள்.

இதைப் பார்த்த அரசன் அவனது நுட்பமான உணர்வைக் கண்டு வியந்து நின்றான்.

அடுத்ததாக அரசன் அழகான பெண் ஒருத்தியை இரண்டாமவனிடம் அனுப்பினான். அவளைப் பார்த்ததும், "ஒரே ஆட்டு நாற்றம் நாறுகிறதே" என்று அலறி அவன் தன் மூக்கைப் பிடித்துக் கொண்டான்.

அரசன் அந்தப் பெண்ணின் வரலாற்றை விசாரித்தான். அவள் குழந்தையாக இருந்த போது ஆட்டுப் பால் குடித்து வளர்ந்தாள் என்ற செய்தி அரசனுக்குக் கிடைத்தது. இரண்டாமவனின் நுண்மையான உணர்வும் அவனுக்கு வியப்பைத் தந்தது.

அதன் பிறகு அவன், தான் உண்ணும் போது முதலாமவனை அழைத்தான். ஆனால் அவனோ அரசர் உண்ணும் சோற்றைப் பார்த்து மூக்கைக் கைகளால் இறுக மூடிக் கொண்டான் "ஐயோ! பிண வாடை வீசுகின்றதே" என்று அலறினான்.

வியப்பு அடைந்த அரசன் "நான் உண்ணும் அரிசி எங்கு எப்படிப் பயிரானது" என்ற விசாரிக்கக்

tamilnavarasam.com

கட்டளை இட்டான். அது சுடுகாட்டுச் சாம்பலை உரமாகப் போட்ட நிலத்தில் விளைந்தது என்று தெரிந்தது.

இவனது நுட்பமான உணர்வையும் பாராட்டினான்.

மூவரில் யாரை மிகவும் நுட்பமான உணர்வு உடையவன் என்று அரசன் கூறி இருப்பான்? ஏன்?

11. மென்மையானவர் யார்?

வெகு காலத்திற்கு முன் பூம்பொழில் நகரத்தை எழிலன் என்ற அரசன் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தான். அவனுக்கு அழகில் சிறந்த மனைவியர் மூவர் இருந்தனர். மூவரிடத்திலும் அரசன் ஈடு இணையற்ற அன்பு கொண்டு இருந்தான்.

இனிய இளவேனிற் காலம் வந்தது. மாலை நேரம், அரசன் தன் முதல் மனைவி முத்து நகையின் அந்தப்புரம் சென்றான். இருவரும் மகிழ்ச்சியாகச் சோலையில் உலாவிக் கொண்டிருந்தனர்.

அப்போது அரசன் விளையாட்டாக முத்து நகையைப் பிடித்து இழுத்தான். அதனால் அவள் தலையில் சூடியிருந்த தாமரை மலர் தவறி அவள் கால்களில் விழுந்தது. மென்மையான அவளால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. 'ஓ' வென்று அலறியபடி மயக்கம் அடைந்தாள்.

உடனே அரண்மனை மருத்துவர் வரவழைக்கப் பட்டார். அரசியைச் சோதித்த அவர் மலர் விழுந்ததால் ஏற்பட்ட காயத்திற்கு மருந்து வைத்துக் கட்டினார். பணிப் பெண்கள் அரசிக்கு விசிறிக் கொண்டிருந்தனர். ஆனாலும் மயக்கம் தெளிய வில்லை.

கவலையோடு இருந்த அரசனைப் பார்த்த மருத்துவர், ''அரசியார் நலம் அடைந்து விடுவார். பயப்பட ஒன்றும் இல்லை'' என்று கூறி விடைபெற்றார்.

வருத்தம் நீங்கிய அரசன், தன் இரண்டாம் மனைவி நகை மொழியின் அந்தப்புரம் சென்றான், இருவரும் அரண்மனை மேன் மாடத்தில் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு தூங்கி விட்டனர்.

இருவர் மீதும் நிலவொளி பட்டது.

திடீரென்று விழித்த நகை மொழி, ''ஐயோ! என் கை எல்லாம் எரிகிறதே'' என்ற அலறினாள்.

உறக்கம் கலைந்த அரசன் அவள் கையில் தீப்பட்ட கொப்புளங்களைப் பார்த்தான்.

''எப்படி இந்த் தீக் காயங்கள் ஏற்பட்டன?'' என்று கேட்டான் அரசன்.

''நிலவொளி பட்டதால் ஏற்பட்டன'' என்று சொல்லி அழுதாள் அவள்.

இரு அரசியர்க்கும் ஏற்பட்ட துன்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டாள் மூன்றாம் மனைவியாகிய பொற்கொடி. அரசனைக் காணத் தன் அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தாள்.

எங்கோ உலக்கை இடிக்கும் ஓசை அவள் காதில் விழுந்தது. ''ஐயோ! செத்தேன்'' என்று அலறினாள்.

RangaRakes tamilnavarasam.com

வலியால் மிகவும் துடித்துத் தன் கைகளை உதறிக் கொண்டிருந்தாள்.

பணிப் பெண்கள் உடனே அவளை அந்தப்புரத்திற்குள் அழைத்துச் சென்றனர். தாமரை மலரில் கருவண்டு அமர்ந்து இருப்பதைப் போல அவளுடைய கைகள் கன்றிப் போயிருந்தன.

இதை அறிந்த அரசன் பரபரப்புடன் அங்கே வந்து சேர்ந்தான். வெறும் உலக்கைச் சத்தத்தால் கன்றிப் போயிருந்த பொற்கொடியின் கைகளைப் பார்த்தான்.

நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்த அவன் தன் மனைவியர் மூவரில் மிகவும் மென்மையானவர் யார் என்று சிந்தித்தான்.

அவனுக்குத் தோன்றிய விடை என்ன?

12. அரசனுக்குத் திருமணம்! அமைச்சனுக்கு மரணம்!

முன்னொரு காலத்தில் பவழத் தீவை மணிமாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். மதியழகன் என்பவன் அவனுக்கு அமைச்சனாக இருந்தான்.

ஒரு நல்ல நாளில் அரசனுக்கும் பக்கத்து நாட்டு இளவரசிக்கும் திருமணம் நடந்தது. ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் அமைச்சனிடம் ஒப்படைத்து விட்டு அந்தப்புரமே கதியென்று கிடந்தான் அரசன்.

ஆனால் நாட்டு மக்களோ அமைச்சனுடைய சூழ்ச்சியால்தான் அரசன் இப்படி ஆகி விட்டான் என்று பேசிக் கொண்டனர்.

RangaRakes

நல்லவனான அமைச்சன் இதை அறிந்து வருந்தினான். அரசனைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு என்ன வழி என்று சிந்தித்தான்.

அரசனிடம் சென்ற அவன் ''நான் புனிதப் பயணம் மேற்கொள்ளப் போகிறேன். திரும்பி வரச் சில ஆண்டுகள் ஆகும். எனக்கு விடை தாருங்கள்'' என்றான்.

அரசன் எவ்வளவோ வற்புறுத்தியும் தன் முடிவை மாற்றிக் கொள்ளாத அமைச்சன் புறப்பட்டான்.

நம்பிக்கைக்கு உரியவர் வேறு யாரும் இல்லாததால் அன்று முதல் அரசனே ஆட்சியைக் கவனித்து வந்தான். மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

பல ஊர்களைச் சுற்றிய அமைச்சன் துறைமுகம் ஒன்றை அடைந்தான். அங்கிருந்த கப்பலில் ஏறி வேற்று நாட்டிற்குப் பயணம் ஆனான்.

கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருந்தது. சிறிது தொலைவில் நீர்ப் பரப்பிற்கு மேலே திடீரென்று ஒரு மரம் எழுந்தது. அந்த மரத்தின் ஒரு கிளையில் கண்ணைக் கவரும் பேரழகு வாய்ந்த பெண்ணொருத்தி அமர்ந்து இருந்தாள். அவள் யாழ் மீட்டி மிக இனிமையாகப் பாடினாள். சிறிது நேரத்தில் அந்தப் பெண்ணும் மரமும் கடலில் மறைந்து விட்டனர்.

வியப்பு அடைந்த அமைச்சன் இதைப் பற்றிப் பக்கத்தில் இருந்தவனைக் கேட்டான்.

அதற்கு அவன், ''இங்கு எப்பொழுது வந்தாலும் இந்தக் காட்சி தெரியும். இது எங்களுக்கு மிகவும் பழக்கமானது'' என்று பதில் தந்தான்.

tamilnavarasam.com

பயணம் முடிந்து நாடு திரும்பினான் அமைச்சன். அவனை வரவேற்ற அரசன், "நீ சென்ற இடத்தில் ஏதேனும் விந்தையான செய்தி உண்டா?" என்று கேட்டான்.

கடலின் நடுவில் தான் கண்ட அழகு மங்கையைப் பற்றி விளக்கமாகச் சொன்னான் அமைச்சன்.

அந்தப் பெண்ணின் அழகில் மயங்கிய அரசன் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை அமைச்சனிடம் ஒப்படைத்தான். அவளைத் தேடிப் புறப்பட்டான்.

அதே துறைமுகத்தில் கப்பல் ஏறினான் அவன். கப்பல் கடலில் குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் வழக்கம் போல் அந்த மரம் தோன்றியது. அதில் அந்தப் பெண்ணும் இருந்தாள்.

உடனே அவன் அந்தப் பெண்ணை அடைய விரும்பிக் கப்பலை விட்டுக் கடலில் குதித்தான்.

கடலின் அடியில் ஓர் அழகிய நகரத்தைக் கண்டான். அங்கிருந்த அரண்மனைக்குள் நுழைந்த அவன் யாழ் மீட்டிய அழகு மங்கையை அங்கே கண்டான்.

"நீ யார்? ஏன் இங்கே தனியாக இருக்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "நான் தேவருலகப் பெண். என் பெயர் யாழ் நங்கை. என் தந்தையார் என் மீது பேரன்பு வைத்திருந்தார். என்னை விட்டுப் பிரிந்து இருக்க மாட்டார்.

ஒரு நாள் வெளியே சென்ற நான் கால தாமதமாக வந்தேன். என் மேல் கோபம் கொண்ட அவர், "நீ

கடலுக்கு அடியில் வாழ்வாயாக. ஒரு நாளைக்கு ஒருமுறை கடல் மேல் தோன்றும் உன்னை யாரேனும் அடைய முயன்றால் நீ அவரை மணந்து ஒரு வாரம் வாழலாம். அதன்பிறகு நீ உன் கணவனை விட்டு நீங்கி இங்கு வந்து சேர்வாய்" என்று சாபம் தந்தார்" என்றாள்.

அவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்ட அவன் தன் நாடான பவழத் தீவை அடைந்தான்.

தங்கள் அரசன் அழகான தேவருலகப் பெண் ஒருத்தியை அழைத்து வந்து இருப்பதை அறிந்து நாட்டு மக்கள் எல்லோரும் மகிழ்ந்தனர்.

ஒரு நல்ல நாளில் மணிமாறனுக்கும் யாழ் நங்கைக்கும் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது.

ஒரு வாரம் கழிந்தது. யாழ் நங்கை தேவருலகம் செல்லும் நாள் வந்தது. நாட்டு மக்கள் எல்லோரும் கவலை தோய்ந்த முகத்துடன் காட்சி அளித்தனர்.

அரசனை வணங்கிய யாழ் நங்கை, "நான் உங்கள் மீது கொண்ட காதலால் தேவருலகம் செல்வதை விரும்ப வில்லை. அதனால் மந்திர சக்திகள் எல்லாம் என்னை விட்டு நீங்கி விட்டன. நானும் இனி சாதாரண மானுடப் பெண்தான். நாம் இனி மகிழ்ச்சியாக வாழலாம்" என்றாள்.

இதைக் கேட்ட அரசன் மகிழ்ச்சி அடைந்தான். நடந்ததை அறிந்த நாட்டு மக்கள் இன்ப வெள்ளத்தில் மூழ்கினர்.

RangaRakes
tamilnavarasam.com

இதைக் கேள்விப்பட்ட அமைச்சனோ உள்ளம் உடைந்து தன் வீடு திரும்பினான்.

அன்றிரவே அவன் நெஞ்சு வெடித்து இறந்தான்.

அமைச்சன் இறந்தது ஏன்?

13. ஏன் அழுதான்? ஏன் சிரித்தான்?

முன்னொரு காலத்தில் மதுரையில் தங்கப்பன் என்ற வணிகன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக் கயற் கண்ணி என்ற பேரழகுடைய மகள் இருந்தாள்.

செல்வத்திலும் வீரத்திலும் தலை சிறந்து விளங்கிய பல அரசர்கள் கயற் கண்ணியை மணந்து கொள்ளப் போட்டி போட்டுக் கொண்டு வந்தனர்.

ஆனால் அவளோ திருமணத்தையே வெறுத்தாள். தன் தந்தையிடம் "இனி யாராவது என் திருமணப் பேச்சை எடுத்தால் நான் அப்பொழுதே தற்கொலை செய்து கொள்வேன். இது உறுதி" என்று சொன்னாள்.

அதனால் அஞ்சிய வணிகன் அன்று முதல் மகளின் திருமணம் பற்றிப் பேசுவதையே விட்டுவிட்டான். இந்தச் செய்தி எங்கும் பரவியது.

அந்த நாட்டில் கை தேர்ந்த திருடன் ஒருவன் இருந்தான். அவன் செய்யாத திருட்டோ கொலையோ இல்லை. அவனைப் பிடிக்க யாராலும் முடியவில்லை.

அந்தத் திருடனுக்கு அஞ்சிய நாட்டு மக்கள் அரசனிடம் சென்று முறையிட்டனர். ஒரு நாள் இரவில்

RangaRakes

அரசன் தன் உயிரையும் பொருட்படுத்தாது அந்தத் திருடனோடு போரிட்டு அவனைச் சிறைப்படுத்தினான்.

அந்தத் திருடனுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். நகர வீதிகளின் வழியே கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டான். நகர மக்கள் திரளாக அவனை வேடிக்கை பார்த்தனர்.

அப்பொழுது மேல் மாடியிலிருந்த கயற் கண்ணி அவனைக் கண்டதும் காதல் கொண்டாள். தந்தையிடம் ஓடிய அவள், "நான் அந்தத் திருடனைத்தான் மணப்பேன். அவர் இறந்தால் நானும் அவருடன் உடன்கட்டை ஏறி உயிர் விடுவேன். நீங்கள் எப்படியாவது அரசரிடம் சொல்லி அவருக்கு விடுதலை வாங்கித் தாருங்கள்" என்று அழுதாள்.

தன் மகளைக் காப்பாற்ற வேறு வழி காணாத வணிகன் அரசனிடம் சென்றான். "என் செல்வம் முழுவதையும் அரசுக்குத் தந்து விடுகிறேன். அதற்குப் பதில் அந்தத் திருடனை விடுவியுங்கள்" என்று மன்றாடினான்.

ஆனால் அரசனோ மறுத்து விட்டான்.

ஏமாற்றத்தோடு வீடு திரும்பிய தந்தையைக் கண்ட கயற் கண்ணி, "என் கணவர் போகும் இடத்திற்கே நானும் போகிறேன்" என்று உறவினர்கள் சூழ்ந்து வரத் திருடன் கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் சென்றாள்.

அங்கே திருடனின் உயிர் மெதுவாகப் போய்க்கொண்டு இருந்தது. தன்னைத் தேடிப்

tamilnavarasam.com

பெருங்கூட்டம் வந்திருப்பதை அறிந்த அவன் வியப்பு அடைந்தான்.

கூட்டத்திலிருந்த ஒருவன் வாயிலாக நடந்ததை எல்லாம் அறிந்த அவன், முதலில் அழுதான். பிறகு சிரித்தான். உடனே அவன் உயிர் போய் விட்டது.

கயற் கண்ணி திருடனின் உடலோடு உடன்கட்டை ஏறத் தயாரானாள். அவளது கற்புத்திறத்தைப் பாராட்டிய கடவுள் திருடனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.

நடந்ததை அறிந்த அரசன் திருடனைத் தன் நாட்டின் படைத் தலைவன் ஆக்கினான். கயற் கண்ணி தன் கணவனுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தாள்.

உயிர் போகும் முன் திருடன் முதலில் அழுததும் பிறகு சிரித்ததும் ஏன்?

14. எது அரிய செயல்?

வீரன் ஒருவன் தன் நாட்டிலிருந்து அடுத்த நாட்டிற்குக் காட்டு வழியே சென்று கொண்டிருந்தான். வழியில் பல திருடர்கள் அழகான பெண்ணொருத்தியைத் தூக்கிச் செல்வதைப் பார்த்தான்.

எப்படியும் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்பிய அவன் திருடர்களோடு போரிட்டான். வீரனைச் சமாளிக்க முடியாத திருடர்கள் அஞ்சி ஓடி விட்டனர். கலங்கி நின்ற அந்தப் பெண்ணிற்கு ஆறுதல் கூறினான் அவன்.

தன்னைக் காப்பாற்றிய அவன் மீது காதல் கொண்டாள் அந்தப் பெண். அவனும் அவளை விரும்பினான். அடுத்த நாட்டை அடைந்தவுடன் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருவரும் முடிவு செய்தனர்.

அந்தப் பெண் பசியினால் வாடிக் களைத்து இருப்பதைக் கண்டான் அவன். அவளை அங்கேயே ஒரு மர நிழலில் படுக்க வைத்தான். ''நான் பக்கத்தில் உள்ள நகரத்திற்குச் சென்று உணவு கொண்டு வருகிறேன்'' என்று அவளிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அந்த நகரத்தில் இருந்த விலைமகள் ஒருத்தியின் அழகில் மயங்கிய அவன் தான் வந்த வேலையை மறந்து அவளுடனேயே தங்கி விட்டான்.

அப்போது அந்தக் காட்டு வழியே வந்த வணிகன் ஒருவன், அங்கு மயங்கிக் கிடந்த பெண்ணைக் கண்டான். அவளைக் காப்பாற்றிய வீரனும் விலைமகளும் இருந்த அதே நகரத்திற்கு அவளை அழைத்து வந்தான். பிறகு அவளைத் திருமணம் செய்து கொண்டு அங்கேயே வாழ்க்கை நடத்தினான்.

வீட்டிற்குள் ஓடிய ஓர் எலியை அடித்த வணிகன், தன் வீரத்தைப் பற்றிப் பெருமையாக அவளிடம் சொன்னான்.

இதைக் கேட்ட அவள், 'பெருவீரம் காட்டிப் பல திருடர்களை வென்று என்னைக் காப்பாற்றிய அந்த வீரன் தன்னைப் பற்றிப் பெருமையாக ஒன்றும்

RangaRakes tamilnavarasam.com

பேசவில்லை. ஆனால் இவனோ வெறும் எலியைக் கொன்றதற்கே இப்படிப் பெருமை பேசுகிறானே. இந்த அற்பனோடு வாழ வேண்டி வந்ததே' என்று நினைத்து வருந்தினாள். அதனால் நெஞ்சு வெடித்து இறந்து போனாள்.

தன் மனைவி இறந்து விட்டாள் என்பதை அறிந்த வணிகனும் உள்ளம் உடைந்து இறந்தான்.

இருவரின் பிண ஊர்வலமும் விலைமகள் இருந்த வீதி வழியாகச் சென்றது. மேல் மாடியில் இருந்த வீரன் அந்தப் பெண்ணின் பிணத்தைப் பார்த்தான். நடந்தது எல்லாம் அவன் நினைவிற்கு வந்தது. ''ஐயோ! என்னால்தானே இருவரும் இறந்து விட்டார்கள்'' என்று அலறிய அவனும் இதயம் வெடித்து இறந்தான்.

நடந்ததை எல்லாம் அறிந்த விலைமகளும் தன் உயிரை விட்டு விட்டாள்.

நால்வரில் யார் உயிரை விட்டது அரிய செயல்?

15. நான்கு முட்டாள்கள்

ஒரு நாள், காட்டு வழியில் நான்கு இளைஞர்கள் தற்செயலாகச் சந்தித்துக் கொண்டனர். ஒவ்வொருவனும் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டான்.

முதலாம் இளைஞன், ''ஏதேனும் ஓர் எலும்பு கிடைத்தால் கூட அந்த விலங்கின் முழு எலும்புக் கூட்டை என்னால் உருவாக்கித் தர முடியும்'' என்று பெருமையாகச் சொன்னான்.

''அந்த எலும்புக் கூட்டின் மேல் என்னால் முழுத் தசையையும் உருவாக்க முடியும்'' என்று தன் ஆற்றலைச் சொன்னான் இரண்டாமவன்.

இதைக் கேட்ட மூன்றாமவன், ''என்னால் அதன் தோல், முடி, நகம் போன்றவற்றை உருவாக்க முடியும்'' என்றான்.

நான்காமவனோ ''இப்படி நீங்கள் உருவாக்கும் விலங்கிற்கு என்னால் உயிர் கொடுக்க முடியும்'' என்றான்.

அவர்கள் நால்வரும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த விரும்பினார்கள். அப்போது அருகில் ஓர் எலும்பு கிடப்பதைக் கண்டார்கள்.

உடனே முதலாமவன் அந்த எலும்பைக் கொண்டு முழு எலும்புக் கூட்டையும் உருவாக்கினான்.

இரண்டாமவன் அதற்குத் தசையைக் கொடுத்தான்.

மூன்றாமவனோ தோல், முடி போன்றவற்றை உண்டாக்கினான். அங்கே உயிர் அற்ற புலியின் உடல் கிடந்தது.

நன்காமவன் அதற்கு உயிர் கொடுத்தான்.

உயிர் பெற்ற புலி நால்வரையும் கொன்று தின்றது.

நால்வரில் யார் பெரிய முட்டாள்? ஏன்?

16. என்ன முறை சொல்லி அழைப்பது?

முன்னொரு காலத்தில் தந்தை, மகன் இருவருமே திருமணம் செய்து கொள்வதற்காகப் பெண் தேடி ஓர்

RangaRakes

tamilnavarasam.com

ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

முதல் நாள் மழை பெய்திருந்ததால் அவர்களுக்கு முன் அதே வழியில் இரண்டு பேர் நடந்து சென்ற காலடித் தடங்கள் தெரிந்தன.

அந்தத் தடங்களை ஆராய்ந்த தந்தை, ''நமக்கு முன்னே சென்ற இருவரும் பெண்கள்தாம். பெரிய காலடித் தடம் தாயுடையதாகவும் சிறிய காலடித் தடம் மகளுடையதாகவும் இருக்க வேண்டும். பெரிய காலடித் தடத்திற்கு உரியவளை நான் மணந்து கொள்கிறேன். நீ மற்றவளை மணந்து கொள்'' என்றார்.

மகனும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

இருவரும் காலடித் தடங்களைப் பின்பற்றி விரைந்து நடந்தனர். அங்கே அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. பெரிய காலடித் தடம் மகளுடையதாகவும் சிறிய காலடித் தடம் தாயுடையதாகவும் இருந்தன.

ஆனாலும் சொன்ன சொல்லை மீறாமல் தந்தை மகளையும் மகன் தாயையும் திருமணம் செய்து கொண்டனர்.

அப்படியானால் யார் யாருக்கு என்ன முறை ஆக வேண்டும்? இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இவர்களை என்ன முறை சொல்லி அழைப்பார்கள்?

17. மூன்று தட்டில் நால்வர்க்கு விருந்து

அமைச்சன் ஒருவன் வீட்டு விருந்திற்கு அரசனும் அரசியும் வந்திருந்தார்கள்.

அவன் வீட்டில் மூன்றே மூன்று தங்கத் தட்டுகள்தான் இருந்தன.

தனக்கும் அரசனுக்கும் அரசிக்கும் மூன்று தட்டுகளில் விருந்து பரிமாறினான். அங்கே அவன் தங்கையும் இருக்க வேண்டி வந்தது.

இருந்தும் எந்தச் சிக்கலும் இன்றி எல்லோரும் சாப்பிட்டு முடித்தனர்.

அப்படியானால் அமைச்சன், அரசன், அரசி, அமைச்சனின் தங்கை நால்வரும் எப்படி மூன்று தட்டுகளில் சாப்பிட்டு இருப்பார்கள்?

18. யார் மணமகன்?

முழு நிலவு ஒளி வீசிக் கொண்டிருந்த இரவு நேரம், ஒரு பெரிய ஆல மரத்தடியில் நான்கு இளைஞர்கள் தங்கி இருந்தனர். அவர்களில் ஒருவன் அந்தணன், இன்னொருவன் பொற்கொல்லன், மூன்றாமவன் தையல்காரன், நான்காமவன் தச்சன்.

அங்கே கிடந்த மரத் துண்டை எடுத்து அழகான பெண்ணாகச் செதுக்கினான் தச்சன். உடனே தையல்காரன் அப்பெண் சிலைக்கு அழகான உடைகளை அணிவித்தான். பொற்கொல்லனோ விலை

RangaRakes
tamilnavarasam.com

மிகுந்த அணிகலன்களை அதற்கு அணிவித்தான். அந்தணன் தன் ஆற்றலால் அந்தப் பெண் சிலைக்கு உயிர் கொடுத்தான்.

அழகான அந்தப் பெண்ணைப் பார்த்த நால்வருமே அவளை மணக்க விரும்பினார்கள். அவர்களுக்குள் சண்டை தொடங்கியது.

அங்கு வந்த முனிவர் ஒருவர் அவர்களை அமைதிப் படுத்தினார்.

எல்லாவற்றையும் கேட்ட அவர் நால்வரில் ஒருவனே அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றார்.

அப்படியானால் யார் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? ஏன்?

19. இருவர்க்கும் ஒரே சாட்சி

வெகு காலத்திற்கு முன் ஓர் ஊரில் மணியகாரர் ஒருவர் இருந்தார். அவர் அழகான குதிரை ஒன்றை வளர்த்து வந்தார்.

அதே ஊரில் முரடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக் களவு செய்வது கைவந்த கலை. அதனால் அவ்வூரிலிருந்த எல்லோரும் அவனைக் கண்டு அஞ்சினார்கள்.

ஒரு நாள் அந்த முரடன் யாருக்கும் தெரியாமல் மணியகாரரின் குதிரையைத் திருடித் தன் வீட்டிற்குக் கொண்டு வந்தான், அதன் வாலை வெட்டினான். தன் குதிரைகளுடன் சேர்த்து அதை வளர்த்து வரலானான்.

RangaRakes

சில நாட்கள் சென்றன. மணியகாரருக்குத் தன் குதிரையை யார் திருடியது என்றும் அது இப்போது எப்படி இருக்கிறது என்றும் தெரிந்து விட்டது.

நேராக மன்னரிடம் சென்ற மணியகாரர் நடந்ததைக் கூறினார்.

அதைக் கேட்ட மன்னர், ''அந்தக் குதிரை உன் குதிரைதான் என்பதற்குச் சாட்சி உண்டா'' என்று கேட்டார்.

''என் பக்கத்து வீட்டுக்காரன் சாட்சி சொல்வான்'' என்றார் மணியகாரர்.

மன்னர் அந்த முரடனைக் குதிரையோடு வரச் செய்து விசாரித்தார்.

அதற்கு அவன், ''அரசே! இது என் குதிரைதான். மணியகாரர் பொய் சொல்கிறார். அவருடைய பக்கத்து வீட்டுக்காரரே எனக்காகச் சாட்சி சொல்வான். கூப்பிட்டு விசாரியுங்கள்'' என்றான்.

இதைக் கேட்ட அரசர், 'எப்படி ஒரே ஆளால் இருவர்க்கும் சாட்சி சொல்ல முடியும்?' என்று குழம்பினார்.

மணியகாரரின் பக்கத்து வீட்டுக்காரனை அழைத்து வரச் சொன்னார்.

இதை அறிந்த பக்கத்து வீட்டுக்காரன், 'நல்ல வம்பில் மாட்டிக் கொண்டேனே. மணியகாரர் பக்கம் சாட்சி சொன்னால் அந்த முரடன் என் வீட்டைக் கொள்ளை அடித்து விடுவான். மாறாக முரடனின் பக்கம் சொன்னால் மணியகாரர் என்னை ஊரை

tamilnavarasam.com

விட்டே விரட்டி விடுவார். பொய் சாட்சி சொன்னதாக அரசர் அறிந்தால் கடுமையாகத் தண்டிப்பார். என்ன செய்வது?'' என்று சிந்தித்தான்.

அவனுக்கு அருமையான வழி ஒன்று தோன்றியது.

அந்தக் குதிரையின் முன்னால் நின்று நன்கு கவனித்தான். அதன் பின்னால் சென்றும் அதை ஆராய்ந்தான்.

இரண்டு பேருக்கும் சாதகமாகச் சாட்சி சொல்வது போலவும் அதே சமயத்தில் அரசனுக்குக் குறிப்பாக உண்மையைச் சொல்வது போலவும் சொன்னான்.

உண்மையை உணர்ந்த அரசன் முரடனைத் தண்டித்தான்.

அப்படியானால் வீட்டுக்காரன் சொன்னது என்ன?

20. பேயை விரட்ட எளிய வழி

ஓர் ஊரில் பயந்த குணமுடைய உழவன் ஒருவன் இருந்தான். ஆனால் அவனுக்கு வாய்த்திருந்த மனைவியோ அடங்காப் பிடாரியாக இருந்தாள். தன் கணவனின் இயல்பு அறிந்த அவள் விளக்குமாற்றால் அவனை ஓங்கி இரண்டடி அடித்த பிறகுதான் அவனுக்குச் சாப்பாடு போடுவாள்.

நாள்தோறும் விளக்குமாற்றுப் பூசை வாங்கி வாங்கி உழவனுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. இவளிடம் அடிபடுவதில் இருந்து தப்பித்துப் பத்து

நாட்களாவது நிம்மதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

தன் மனைவியிடம், ''நான் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டி உள்ளது. திரும்பி வரப் பத்து நாட்கள் ஆகும்'' என்றான் அவன்.

''உன்னை விளக்குமாற்றால் அடிக்கா விட்டால் எனக்குத் தூக்கம் வராதே. நான் என்ன செய்வேன்?'' என்றாள் அவள்.

அதற்கு அவன், ''தோட்டத்தில் வேப்ப மரம் உள்ளது. அதை நானாக நினைத்து அடி'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

தன் கணவன் சொன்னது போலவே அந்த அடங்காப் பிடாரியும் வேப்ப மரத்தை விளக்குமாற்றால் ஓங்கி அடித்தாள்.

அந்த மரத்தில் நீண்ட காலம் தங்கி இருந்த ஒரு பேய் அவளின் அடியைத் தாங்க மாட்டாமல் அந்த மரத்தை விட்டு ஓடிப் போயிற்று.

உழவனிடம் வந்த அந்தப் பேய், ''நீ எப்படித்தான் உன் மனைவியின் விளக்குமாற்று அடியை இவ்வளவு காலம் பொறுத்து இருந்தாயோ? என்னால் ஒரு நாள் கூடத் தாங்க முடியவில்லை. அதனால் உனக்கு ஓர் உதவி செய்கிறேன். நான் இந்த நாட்டு அரசனின் மகளைப் பிடித்துக் கொள்கிறேன். நீ வந்தால்தான் அவளை விட்டுப் போவேன். உனக்கு ஏராளமான பொருள் பரிசாகக் கிடைக்கும்'' என்று சொல்லிவிட்டுப் போனது.

RangaRakes

tamilnavarasam.com

சொன்னபடியே அந்தப் பேயானது அந்நாட்டு அரசனின் மகளைப் பிடித்துக் கொண்டது. பெரிய பெரிய மந்திரவாதிகள் எல்லாம் வந்து பேயை விரட்ட முயன்றனர். யாராலும் வெற்றி பெற முடியவில்லை.

கடைசியில் அந்த உழவன் இளவரசியின் அருகில் வந்தான். அவனைக் கண்டதும் பேய், ''நான் உனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்டேன். இனி நீ என் வழிக்கு வந்தால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று இளவரசியை விட்டு நீங்கியது.

பேயிடமிருந்து தன் மகளைக் காப்பாற்றிய உழவனுக்கு அரசன் நிறைய பொருள்களைப் பரிசாகத் தந்தான்.

ஆனால் அந்தப் பேயோ இன்னொரு அரசனின் மகளைப் பிடித்துக் கொண்டது. உழவனைப் பற்றிக் கேள்விப்பட்டான் அந்த அரசன். உடனே அவனைத் தன் நாட்டிற்கு வரவழைத்தான்.

''பேயை விரட்டினால் பெரும்பொருள் பரிசாகத் தருவோம். இல்லையேல் உன் உடலில் உயிர் இருக்காது'' என்று கடுமையாகச் சொன்னான் அரசன்.

வேறு வழி காணாத உழவன் பேய் பிடித்திருந்த இளவரசியின் அருகே சென்றான். அவனைக் கண்டதும் பேய், ''உனக்கு என்ன திமிர்? மீண்டும் என் வழிக்கு வருகிறாயா? என்னை யார் என்று நினைத்துக் கொண்டாய்? என்னை விரட்ட உன்னால் ஆகுமா? நன்றி கெட்ட உன் உடலிலிருந்து உயிர் நீங்குவதைப் பார்த்த பிறகுதான் நான் இங்கிருந்து போவேன்'' என்று கோபத்துடன் கத்தியது.

ஆனால் உழவனோ பேயிடம் ஏதோ சொன்னான்.

உடனே அந்தப் பேய் அலறி அடித்துக் கொண்டு இளவரசியை விட்டு ஓடிப் போயிற்று.

பேயிடம் உழவன் சொன்னது என்னவாக இருக்கும்?

21. காலையில் செய்தால் தப்பு! மாலையில் செய்தால் உவப்பு!

முன்னொரு காலத்தில் பாரசீக நாட்டை சாதிக் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவனுடைய அவைக்கு, 'இசுலாமிய சட்ட திட்டங்களை நன்கு அறிந்தவர்' என்று புகழப்பட்ட அலிஇப்னு என்ற பெரியவர் வருகை தந்தார்.

அவரை வரவேற்ற அரசன், ''இப்னு அவர்களே! பல நாட்களுக்கு முன் நான் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அது உண்மையா பொய்யா என்று எனக்குத் தெரியவில்லை. பலரிடம் கேட்டும் தெளிவு பெறாமல் இருக்கிறேன். தாங்கள்தாம் அதற்குச் சரியான விளக்கம் தர வேண்டும்'' என்று கேட்டான்.

''என்னால் முடியுமானால் உங்கள் குழப்பத்தைத் தீர்த்து வைக்கிறேன். தாங்கள் கேள்விப் பட்டதைக் கூறுங்கள்'' என்றார் இப்னு.

''காலையில் ஒருவன் பெண் ஒருத்தியைப் பார்க்கிறான். அவன் அவளைப் பார்ப்பதைச் சட்டம் ஒப்புக் கொள்ளவில்லை.

RangaRakes

tamilnavarasam.com

நண்பகலில் மீண்டும் அதே பெண்ணைப் பார்க்கிறான். ஆனால் இப்பொழுது சட்டம் அவன் அப்படிப் பார்ப்பதை ஒப்புக் கொள்கிறது.

அன்று மாலையில் மறுபடியும் அவன் அந்தப் பெண்ணையே பார்க்கிறான். அவன் செயல் சட்டத்தை மீறிய செயல் ஆகிறது.

இரவுப் பொழுதின் தொடக்கத்தில் மீண்டும் பார்க்கிறான். இப்பொழுது அவன் செயல் சட்டத்திற்கு உட்பட்ட செயல் ஆகிறது.

நள்ளிரவில் அவளைப் பார்க்கும் அவன் செயலைச் சட்டம் எதிர்க்கின்றது.

மறுநாள் காலையில் மீண்டும் அந்தப் பெண்ணை அவன் பார்க்கிறான். இப்போது அவன் செயலைச் சட்டம் ஒப்புக் கொள்கிறது.

அப்படியானால் ஒரே செயல் நேரத்திற்கு ஏற்ப சட்டத்திற்கு உட்பட்டதாகவும் சட்டத்தை மீறியதாகவும் எப்படி இருக்க முடியும்? இது உண்மையா? தாங்கள் விளக்கம் தர வேண்டும்'' என்றான் அரசன்.

''உண்மைதான்'' என்ற இப்னு மன்னனின் சந்தேகத்திற்குத் தெளிவான விளக்கம் தந்தார்.

இப்னு என்ன விளக்கம் தந்திருப்பார்?

22. சிக்கலுக்கு மேல் சிக்கல்

முன்னொரு காலத்தில் பாக்தாத் நகரை அருன் அல் ரசீத் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருடைய நெருங்கிய நண்பரான ஜாபர் என்பவர் முதல் அமைச்சராக இருந்தார்.

ஒரு நாளிரவு, அருன் அல் ரசீதும் ஜாபரும் மதுவைக் குடித்து மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருந்தார்கள். இருவருக்குமே போதை ஏறிக் கொண்டிருந்தது.

''ஜாபர்! அழகான அடிமைப் பெண் ஒருத்தியை விலைக்கு வாங்கி இருக்கிறாயாமே? எனக்கு அவளை விற்றுவிடு. நீ என்ன விலை கேட்டாலும் நான் தந்து விடுகிறேன்'' என்றார் அரசர்.

''நான் அவளை யாருக்கும் விற்பதாக இல்லை'' என்றார் ஜாபர்.

''அப்படியானால் எனக்கு அன்பளிப்பாகத் தந்துவிடு'' என்றார் அரசர்.

''அன்பளிப்பாகவும் தர மாட்டேன்'' என்று மறுமொழி தந்தார் ஜாபர்.

மது மயக்கத்தில் இருந்த அரசர் இதைக் கேட்டுக் கோபம் கொண்டார். ''ஜாபர்! நீ எனக்கு அந்த அடிமைப் பெண்ணை விலைக்கோ அல்லது அன்பளிப்பாகவோ தர வேண்டும். அவள் எனக்குக் கிடைக்கா விட்டால் அரசி சுபைதா தேவியை மூன்று முறை 'தலாக்' சொல்லி விவாக ரத்து செய்து விடுவேன். இது உறுதி'' என்று கூச்சல் போட்டார்.

போதை தலைக்கேறி இருந்த ஜாபரும் கோபத்துடன், ''நான் அவளை உங்களுக்கு விலைக்கோ அல்லது அன்பளிப்பாகவோ தர

RangaRakes
tamilnavarasam.com

மாட்டேன். அப்படித் தந்து விட்டால் மூன்று குழந்தைகளின் தாயாகிய என் அன்பு மனைவியை நானும் மூன்று முறை 'தலாக்' கூறி விவாக ரத்து செய்து விடுவேன்'' என்று கத்தினார்.

சிறிது நேரத்தில் இருவருக்கும் போதை தெளிந்தது. குடிவெறியில் பேசியவை எல்லாம் அவர்கள் நினைவுக்கு வந்தன.

'என்ன செய்தாலும் யாராவது ஒருவர் மனைவியை விவாக ரத்து செய்தாக வேண்டும்' என்று இருவரும் வருந்தினார்கள்.

எந்தச் சிக்கலானாலும் அதைத் தீர்த்து வைக்கக் கூடிய அறிஞரான காஜி அலி யூசுப்பின் நினைவு அரசருக்கு வந்தது. உடனே ஒரு வீரனை அழைத்து அலி யூசுப்பை அழைத்து வருமாறு கட்டளை இட்டார்.

அந்த இரவு நேரத்தில் அலி யூசுப் அங்கு வந்து சேர்ந்தார். அரசர் நடந்ததை எல்லாம் அவரிடம் கூறி ''நீங்கள்தான் இந்தச் சிக்கலைத் தீர்க்க ஏதேனும் வழி காண வேண்டும்'' என்றார்.

இதைக் கேட்ட அலி யூசுப் ''இதில் சிக்கல் எதுவுமே இல்லையே. ஜாபர் அந்த அடிமைப் பெண்ணை உங்களுக்குப் பாதி விலைக்கும் பாதி அன்பளிப்பாகவும் தரட்டும். அதனால் அவளை விற்றதாகவும் ஆகாது. அன்பளிப்பாகக் கொடுத்ததாகவும் ஆகாது. இருவர் உறுதி மொழியும் காப்பாற்றப் படும்'' என்றார்.

அலி யூசுப்பின் அறிவுரையைக் கேட்ட இருவரும் மகிழ்ந்தனர். உடனே ஜாபர் அந்தப் பெண்ணை அங்கு

வரவழைத்தார். அவளைப் பாதி விலையாகவும் பாதி அன்பளிப்பாகவும் அரசர்க்குக் கொடுத்தார்.

அந்தப் பெண்ணின் அழகில் மயங்கிய அரசர், ''அலி யூசுப்! இவளைச் சட்டப்படி அடிமைத் தளையில் இருந்து விடுவித்து நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். அதற்காக நான் சில நாட்கள் காத்திருக்க வேண்டும். என்னால் அவ்வளவு காலம் பொறுத்திருக்க முடியாது. இவளை இப்பொழுதே நான் திருமணம் செய்ய வேண்டும். ஏதேனும் வழி கூறுங்கள்'' என்றார்.

''இது அதைவிட மிக எளிது'' என்ற அலி யூசுப் ''உங்கள் அடிமை ஒருவனை அழையுங்கள். அவனிடம் இவளைத் திருமணம் செய்தவுடன் பணம் பெற்றுக் கொண்டு விவாக ரத்து செய்துவிட வேண்டும் என்று சொல்லுங்கள். அவன் ஒப்புக் கொண்டால் அதன் பிறகு அவளுக்கும் உங்களுக்கும் திருமணம் செய்வது எளிது'' என்றார்.

அரசன் மகிழ்ச்சி அடைந்தான். அடிமைக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தது.

ஆனால் அந்த அடிமையோ, ''நான் அவளைச் சட்டப்படி மணம் செய்துள்ளேன். அவளை எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது. ஆகவே விவாக ரத்து செய்ய மாட்டேன்'' என்றான்.

இதைக் கேட்ட அரசர் கோபத்துடன், ''அலி யூசுப்! உம் அறிவுத் திறமை உம்மைக் கொலைக் களத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறது. அழகான பெண்ணை

RangaRakes
tamilnavarasam.com

இந்த அடிமைக்குத் திருமணம் செய்துவிட்டு இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேன்'' என்று கத்தினார்.

ஆனால் அலி யூசுப் அமைதியாக, ''அரசே! சிக்கல் இப்போது மேலும் எளிதாகி விட்டது, அந்த அடிமையை எனக்கு அன்பளிப்பாகத் தாருங்கள்'' என்றார்.

அப்படியே அரசரும் தந்தார்.

உடனே அலி யூசுப் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''இந்த அடிமையை உனக்கு அன்பளிப்பாகத் தருகிறேன். பெற்றுக் கொள்கிறாயா?'' என்று கேட்டார்.

அவளும் ஒப்புக் கொண்டு அவனை ஏற்றுக் கொண்டாள்.

பிறகு அலி யூசுப் அரசருக்கும் அவளுக்கும் திருமணம் செய்து வைத்தார்.

என்ன செய்து அலி யூசுப் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்திருப்பார்?

23. விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்

முன்னொரு காலத்தில் வங்க நாட்டை ஒரு பெரிய கருமி ஆண்டு வந்தான். அவன் யாருக்கும் எதுவும் தர மாட்டான்.

ஒரு நாள், அவன் அரியணையில் வீற்றிருக்கும் பொழுது புலவன் ஒருவன் அங்கு வந்தான். அரசனைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினான். அரசனும் அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான்.

''அரசே! தங்களைப் புகழ்ந்து பாடியதற்குப் பரிசில் கொடுத்தால் நான் விடைபெற்றுக் கொள்வேன்'' என்றான் புலவன்.

இதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டான். 'இவனுக்குப் பரிசிலும் கொடுக்கக் கூடாது. நம் பெயரும் கெடக் கூடாது. என்ன செய்வது?' என்று சிந்தித்தான்.

'என்ன முயன்றாலும் இந்தப் புலவன் நம்மைப் பகல் நேரத்தில்தான் சந்திக்க முடியும்' என்று நினைத்த அரசனுக்கு அருமையான வழி ஒன்று தோன்றியது.

புலவனைப் பார்த்து, ''உன் பாடல்கள் மிகவும் அற்புதமாக உள்ளன. கலைமகள் உனக்குக் கைகட்டி ஏவல் செய்கிறாள். உன் திறமையைப் பாராட்டி உனக்கு ஆயிரம் பொற் காசுகள் பரிசு அளிக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் இந்தக் கதிரவன் உனக்கு எதுவும் தரக் கூடாது என்று என்னைத் தடுக்கின்றானே. நான் என்ன செய்வேன்?'' என்று தேனொழுகப் பேசினான்.

புலவனுக்கு அரசனின் சூழ்ச்சி புரிந்தது. தான் என்ன சொன்னாலும் அரசன் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்பதை உணர்ந்த அவன் நல்ல காலத்தை எதிர்பார்த்து அந்த நாட்டிலேயே தங்கி இருந்தான்.

மீண்டும் ஒரு நாள் அரண்மனைக்குச் சென்ற அவன் அரசனிடம் ஆயிரம் பொற்காசுகள் பரிசாகப் பெற்றுத் திரும்பினான்.

புலவன் பரிசு பெற்றது எப்படி?

RangaRakes

tamilnavarasam.com

24. புகழ்ச்சியா? இகழ்ச்சியா?

ஒரு நாள் அரசன் ஒருவனுடைய அவைக்குப் புகழ் பெற்ற ஆடல் அழகிகள் மூவர் வருகை தந்தனர். அவர்களைச் சிறப்பாக வரவேற்றான் அரசன்.

அவர்கள் மூவரும் தங்கள் ஆடல் பாடல் திறமையால் அரசவையில் இருந்த அனைவரையும் மகிழ்வித்தனர். அரசன் அவர்களைப் பாராட்டிப் பெரும்பொருள் பரிசாகத் தந்தான்.

ஆடல் அழகிகள் மூவரும் அரண்மனையில் தாங்கள் தங்கும் அறைக்கு வந்தனர். அவர்கள் பேசிக்கொண்டது அந்த வழியே வந்த அரசன் காதிலும் அமைச்சன் காதிலும் விழுந்தது.

முதலாமவள், ''இந்த அரசனின் செயல் வேருள்ள கழியைப் போல் இருந்தது'' என்று சொன்னாள்.

அதற்கு இரண்டாமவள், ''அப்படிச் சொல்லாதே. அவர் செயல் முள்ளும் முரடும் போல் இருந்தது'' என்றாள்.

ஆனால் மூன்றாமவளோ, ''அரசரின் செயல் கல்லும் கரடுமாய் இருந்தது'' என்று இருவரையும் மறுத்துச் சொன்னாள்.

இதைக் கேட்ட அரசன் கோபத்துடன், ''என்னை இப்படி இழிவாகப் பேசுகிறார்களே? இவர்களுக்கு எவ்வளவு திமிர்? இவர்களை என்ன செய்கிறேன் பார்?'' என்று அமைச்சனிடம் கூச்சலிட்டான்.

ஆனால் அமைச்சனோ அமைதியாக, 'அரசே! அவர்கள் மூவரும் உங்களைப் புகழ்ந்துதான் பேசினார்கள்' என்று சொல்லி அவர்கள் பேச்சிற்கு விளக்கமும் தந்தான்.

அமைச்சன் தந்த விளக்கம் என்னவாக இருக்கும்?

25. இளவரசியை மணப்பது யார்?

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரே மகள். அவள் அழகைப் பற்றிக் கேள்விப்பட்ட மூன்று இளவரசர்கள் அங்கு வந்தார்கள்.

மூவரையும் வரவேற்றான் அரசன். தன் மகளுக்கு மூவருமே பொருத்தமானவர்கள் என்பதை அறிந்தான் அவன். யாருக்குத் திருமணம் செய்து வைப்பது என்று குழம்பினான்.

அவர்கள் மூவரையும் பார்த்து, ''உங்களுக்கு ஓராண்டு தவணை தருகிறேன். உங்களில் யார் கிடைத்தற்கு அரிய பொருளைக் கொண்டு வருகிறீர்களோ அவருக்கே இளவரசியைத் திருமணம் செய்து தருவேன்'' என்றான் அரசன்.

அவர்கள் மூவரும் வேறொரு நாட்டிற்குச் சென்று முயற்சியில் இறங்கினார்கள்.

அவர்களில் ஒருவனுக்கு எங்கு நிகழ்வதையும் பார்க்கக் கூடிய மாயக் கண்ணாடி கிடைத்தது. இன்னொருவனுக்கு எங்கு நினைத்தாலும் உடனே அங்கு பறந்து செல்லக் கூடிய மந்திரக் காலணி

RangaRakes
tamilnavarasam.com

கிடைத்தது. மற்றொருவனுக்கு எப்படிப்பட்ட கடுமையான நோயாக இருந்தாலும் அதைக் தீர்க்கக் கூடிய மந்திர மாம்பழம் ஒன்று கிடைத்தது.

மீண்டும் மூவரும் ஒன்று சேர்ந்தனர். தங்களுக்குக் கிடைத்த அரிய பொருள்களைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டார்கள்.

முதலாமவன் தன்னிடம் இருந்த கண்ணாடியை அவர்களிடம் காட்டி, ''மாயக் கண்ணாடியே! இப்போது இளவரசி என்ன செய்கிறாள் என்பதை எங்களுக்குக் காட்டு'' என்றான்.

உடனே கண்ணாடியில் இளவரசி தெரிந்தாள். அவள் கடும்நோயுற்றுக் கிடப்பதும் மருத்துவர்கள் 'இனி அவள் பிழைக்க மாட்டாள். சிறிது நேரத்தில் இறந்து விடுவாள்' என்று வருத்தத்துடன் சொல்வதும் தெரிந்தது.

இதைக் கண்ட மூவரும் திகைத்தனர்.

இரண்டாமவன், ''என்னிடம் எங்கு நினைத்தாலும் உடனே செல்லக் கூடிய காலணி உள்ளது. யாராவது அவளைக் காப்பாற்றுவதாக இருந்தால் இதை அணிந்து கொண்டு செல்லலாம்'' என்றான்.

அதைக் கேட்ட மூன்றாமவன் அந்தக் காலணியை அணிந்து இளவரசியிடம் சென்றான். மந்திர மாம் பழத்தை அவளுக்கு உண்ணக் கொடுத்தாள். அவள் அதைச் சாப்பிட்டு நலம் அடைந்தாள்.

மற்ற இருவரும் சில நாட்களில் இளவரசியின் நாட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

மூவருமே தன்னால்தான் இளவரசியின் நோய் தீர்ந்தது. ஆகவே தனக்கே இளவரசியைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றார்கள்.

இளவரசியை யார் மணக்க வேண்டும்? ஏன்?

26. கடுக்கன் திருடியது யார்?

ஒரு நாள் இரவு, சத்திரம் ஒன்றில் நிறைய வழிப் போக்கர்கள் ஓரே பக்கம் பார்த்தபடி தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

அவர்களில் ஒருவன் திருடன். அவன் நள்ளிரவில் தன் எதிரே வலது காதைக் கீழாக வைத்துப் படுத்து இருந்தவனுடைய இடது காது வைரக் கடுக்கனைக் கழற்றினான். அதைத் தன் இடது காதில் போட்டுக் கொண்டான். தானும் தூங்குவது போல நடித்தான்.

பொழுது விடிந்தது. எல்லோரும் விழித்தனர். கடுக்கனை இழந்தவன் அதை அறிந்ததும் திடுக்கிட்டான். எவன் திருடி இருப்பான் என்று அனைவரையும் பார்த்தான். அவன் கண்களில் இடக் காதில் மட்டும் கடுக்கனோடு இருந்த திருடன் தென்பட்டான்.

உடனே அவனைப் பிடித்து, ''என்னிடம் இருந்து திருடிய கடுக்கனை மரியாதையாகத் தந்துவிடு'' என்று கூச்சல் போட்டான்.

திருடனோ ''ஐயோ! இதைக் கேட்பார் இல்லையா? நான் தூங்கும் போது என் கடுக்கனைத் திருடிப் போட்டுக் கொண்டு இப்போது என்னையே

RangaRakes
tamilnavarasam.com

திருடன் என்கிறானே'' என்று அப்பாவி போலப் பேசினான்.

அங்கு இருந்தவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

எல்லோரும் நீதி மன்றம் சென்றனர். வழக்கை நன்கு விசாரித்த நீதிபதி, ''எல்லோரும் சத்திரத்தில் எப்படிப் படுத்துத் தூங்கினீர்கள்? அப்படியே சிறிதும் மாறாமல் இங்கே படுத்துக் காட்டுங்கள்'' என்று கட்டளை இட்டார்.

எல்லோரும் அப்படியே படுத்தனர்.

அவர்கள் எல்லோரும் படுத்து இருந்ததைப் பார்த்த நீதிபதி, உண்மையான திருடனைக் கண்டுபிடித்துத் தண்டித்தார்.

நீதிபதி எப்படித் திருடனைக் கண்டுபிடித்து இருப்பார்?

27. உண்மையான அரசன்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டைப் பேரரசன் ஒருவன் ஆண்டு வந்தான். தன் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட சிற்றரசன் ஒருவனின் அமைச்சன் அறிவு நிரம்பியவன் என்று கேள்விப்பட்டான்.

அந்த அமைச்சனின் அறிவைச் சோதிக்க விரும்பினான். அவனைத் தன் நாட்டிற்கு அழைத்து வரச் செய்தான்.

அவன் அரசவைக்கு வரும்முன், அமைச்சன் உடைகளைத் தான் அணிந்து கீழே அமர்ந்தான்.

அமைச்சனோ அரசன் உடைகளை அணிந்து அரியணையில் அமர்ந்தான்.

''வரும் அமைச்சன் என்னை அரசன் என்று வணங்கினால் சிறந்த அறிவுடையவன். மாறாக அரியணையில் வீற்றிருக்கும் அமைச்சனாகிய உன்னை வணங்கினால் அவன் அறிவு இல்லாதவன்'' என்றான் அரசன்.

அறிவு நிரம்பிய அமைச்சன் உள்ளே நுழைந்தான். அரசவையில் பெரும் அமைதி நிலவியது.

அவன் எல்லோரையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டே வந்தான்.

அமைச்சன் வேடத்தில் இருந்த அரசனை வணங்கிய அவன், ''அரசே! எங்கள் அரசர் தங்களுக்கு அனுப்பி உள்ள பரிசுப் பொருள்களை ஏற்று அருளுங்கள்'' என்று வேண்டினான்.

தன்னையே அரசன் என்று கண்டுபிடித்த அந்த அமைச்சனின் அறிவைப் பாராட்டினான் அரசன்.

அமைச்சன் வேடத்திலிருந்த அரசனை வந்தவன் எப்படிக் கண்டுபிடித்து இருப்பான்?

28. கடலைக் கண்டு அஞ்சியவன்

அரசன் ஒருவன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பதற்காகக் கடலின் நடுவில் உள்ள அழகிய தீவிற்குச் செல்ல விரும்பினான். அதற்கான முன்னேற்பாடுகள் நடந்தன.

RangaRakes tamilnavarasam.com

அரசனும் அமைச்சனும் வீரர்களும் படகில் அமர்ந்தனர். படகு மெல்ல மெல்லத் தீவை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

படகில் இருந்த வீரர்களுள் ஒருவன், ''ஐயோ'' என்று அலறியபடி படகுக்குள் அங்கும் இங்குமாக ஓடத் தொடங்கினான், வீரர்கள் அவனைப் பிடித்துக் கொண்டனர். ஆனால் அவனோ திமிறிக் கொண்டிருந்தான். அவனது ஆர்ப்பட்டத்தால் படகு கவிழ்ந்து விடுமோ என்று எல்லோரும் அஞ்சினார்கள்.

அங்கிருந்த அமைச்சன் ஒருவன் வீரர்களைப் பார்த்து, ''அவனைத் தூக்கிக் கடலில் போடுங்கள்'' என்று சொன்னான். வீரர்களும் அவனைக் கடலில் போட்டனர்.

தண்ணீருக்குள் மூழ்கிய அந்த வீரனோ தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்தான். சிறிது நேரம் சென்றதும் அவனை இழுத்துப் படகில் போடுமாறு சொன்னான் அமைச்சன். கடலில் குதித்த வீரர்கள் அவனைப் படகுக்கு இழுத்து வந்தனர்.

மீண்டும் படகுக்கு வந்த பிறகு அந்த வீரன் மிகவும் அமைதியாக இருந்தான்.

இதைக் கண்டு வியப்பு அடைந்த அரசன், வீரனின் அமைதிக்கான காரணத்தை அமைச்சனிடம் கேட்டான்.

அமைச்சன் என்ன விளக்கம் தந்து இருப்பான்?

RangaRakes

29. எப்படி இறப்பது?

வெகு நாட்களுக்கு முன் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த அறிஞனும் இசைக் கலைஞனுமான ஒருவன் மீது பேரன்பு வைத்திருந்தான். இருவரும் எப்பொழுதும் இணை பிரியாமல் பேசி மகிழ்ந்து கொண்டிருப்பார்கள்.

பகைவனான பக்கத்து நாட்டு அரசன், 'எப்படியும் இந்த அரசனைக் கொன்று விட வேண்டும்' என்று நினைத்தான். தான் நினைத்ததை முடிப்பதற்காகத் திறமை மிகுந்த ஒற்றன் ஒருவனை அந்நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்த அந்த ஒற்றன், அரசனுடைய நம்பிக்கைக்கு உரியவன் இசைக் கலைஞன் என்பதை உணர்ந்தான். அவன் வீட்டிற்குச் சென்றான்.

இசைக் கலைஞனும் அவன் மனைவியும் அவனை வரவேற்றார்கள்.

அவர்களது நெருங்கிய உறவினன் என்று நம்ப வைத்து அங்கேயே தங்கி விட்டான் அவன்.

அரசனைக் கொல்வதற்கு வாய்ப்பை எதிர்பார்த்திருந்த அந்த ஒற்றன், இசைக் கலைஞன் எழுதுவது போல அரசனுக்கு ஓலை ஒன்றை அனுப்பினான். அதில் உடனே, 'தன்னை வீட்டில் வந்து சந்தித்தால் ஓர் அதிசயத்தைக் காணலாம்' என்று குறிப்பிட்டு இருந்தான்.

tamilnavarasam.com

மடலை நம்பிய அரசன் அன்றிரவு இசைக் கலைஞன் வீட்டிற்கு வந்தான். மறைந்திருந்த ஒற்றன் அரசனைத் தாக்க முயன்றான். விழிப்போடு இருந்த அரசனோ உடனே அந்த ஒற்றனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

எல்லாவற்றுக்கும் காரணம் இசைக் கலைஞன் என்பதை நினைத்த அரசன் அவன் மீது கோபம் கொண்டான்.

நடந்ததை அறிந்த இசைக் கலைஞன் தன்னை மன்னிக்குமாறு அரசனின் கால்களில் விழுந்து வேண்டினான்.

கோபம் அடங்காத அரசனோ, ''நீ தெரிந்தோ தெரியாமலோ என்னைக் கொலை செய்யும் முயற்சிக்கு உடந்தையாக இருந்து இருக்கிறாய். அதற்காக உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன். ஆனால் நீ இதற்கு முன்பு பல முறை என் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தந்திருக்கிறாய். அதனால் நீ எப்படிச் சாக விரும்புகிறாயோ அப்படியே சாகலாம். இனி என்னிடம் மன்றாடுவதில் பயன் இல்லை'' என்றான்.

அரசனின் சொற்களைக் கொண்டே அந்த இசைக் கலைஞன் பிழைத்துக் கொண்டான்.

அப்படியானால் அவன் எப்படி இறக்க விரும்பி இருப்பான்?

30. எவ்வளவு நேரம் ஆகும்?

மருதூரில் தன் அத்தை படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாள் என்பதைக் கேள்விப் பட்டான் முருகன்.

அவ்வூருக்கு இதற்கு முன் சென்றிராத அவன் தன் நண்பனிடம் வழி கேட்டுக் கொண்டு புறப்பட்டான்.

சில நாட்கள் நடைப் பயணத்தில் அவன் களைத்து விட்டான். ஆனால் மருதூரோ வந்தபாடு இல்லை. யாரையாவது விசாரிக்கலாம் என்றால் அவனைத் தவிர அந்தப் பாதையில் யாருமே இல்லை.

கால் வலியைப் பொருட்படுத்தாமல் மேலும் சிறிது தொலைவு நடந்தான். அவன் கண்களுக்குப் பாதையின் ஓரத்தில் மரத்தை வெட்டிக் கொண்டிருந்த கிழவன் ஒருவன் தெரிந்தான்.

மகிழ்ச்சியோடு கிழவனை நெருங்கிய அவன், ''ஐயா! இங்கிருந்து மருதூர் செல்ல எவ்வளவு நேரம் ஆகும்?'' என்று பணிவாகக் கேட்டான்.

ஆனால் கிழவனோ எந்தப் பதிலும் பேசவில்லை.

அவரை அரைச் செவிடு என்று நினைத்த அவன் உரத்த குரலில் ''மருதூர் செல்ல எவ்வளவு நேரம் ஆகும்?'' என்று கத்தினான்.

இப்பொழுதும் கிழவன் ஏதும் பேசவில்லை.

'சரி முழுச் செவிடு' என்று நினைத்து எரிச்சலுடன் தன் பயணத்தைத் தொடர்ந்தான் அவன்.

சிறிது தொலைவு சென்றிருப்பான். கிழவன் தன்னைக் கூப்பிடுவதை அறிந்து திரும்பிப் பார்த்தான். ''மருதூர் செல்ல இரண்டு மணி நேரம் ஆகும்'' என்றான்.

''நான் பலமுறை கேட்டும் பதில் தராத நீ, இப்பொழுது என்னைக் கூப்பிட்டுச் சொல்கிறாயே? ஏன்?'' என்று கோபத்துடன் கேட்டான்.

RangaRakes
tamilnavarasam.com

அதற்குக் கிழவன் தான் அவனைக் கூப்பிட்டுச் சொன்னதற்கான காரணத்தைக் கூறினான். அவனும் அதை ஏற்றுக் கொண்டான்.

ஏன் அப்படிச் செய்தான் கிழவன்?

30. தங்கினால் நீ! இல்லையேல் மனைவி!

ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பறவைகள் பேசும் மொழியைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இருந்தது. பக்கத்து ஊரில் இருந்த தன் தங்கையைப் பார்த்து வரப் புறப்பட்டான்.

தன் வீட்டிற்கு வந்த அண்ணனைச் சிறப்பாக வரவேற்றாள் தங்கை. அங்கேயே இரண்டு நாட்கள் தங்கினான். மறுநாள் காலையில் தங்கையிடம் விடை பெற்றுத் தன் ஊருக்குக் கிளம்பினான்.

அவனை வழியனுப்ப வந்த தங்கை மூடியால் நன்கு மூடப்பட்ட பெரிய பலகாரப் பாத்திரத்தை அவனிடம் தந்தாள்.

''அண்ணா! வழியில் இதில் உள்ள பலகாரத்தை வயிறு நிரம்பச் சாப்பிடு. மீதியை அண்ணியிடம் தந்துவிடு'' என்றாள்.

நண்பகல் நேரம். நடந்த களைப்பு வேறு. வழியில் இருந்த ஆல மர நிழலில் இளைப்பாற அமர்ந்தான் அவன். பாத்திரத்தின் மூடியைச் சுழற்றினான். அதில் உள்ள பலகாரத்தைச் சுவைத்துச் சாப்பிட்டான். அப்படியே படுத்துத் தூங்கி விட்டான்.

மாலை நேரத்தில்தான் அவனுக்கு விழிப்பு வந்தது. திறந்து கிடந்த பாத்திரத்தில் மூடியை வைத்து இறுக மூடினான் பிறகு பயணத்தைத் தொடர்ந்தான்.

வழியில் ஒரு மரத்தில் இரண்டு பறவைகள் அமர்ந்து இருந்தன. அவற்றுள் ஒன்று ''வழியில் தங்கினால் இவன் உயிர் போகும்'' என்றது. உடனே இன்னொரு பறவை, ''வழியில் தங்காவிட்டால் இவன் மனைவி உயிர் போகும்'' என்றது.

இதைக் கேட்ட உழவன் திகைத்தான். 'ஐயோ! நானோ அல்லது என் மனைவியோ இறக்க வேண்டுமா? வரும் ஆபத்தை எப்படித் தவிர்ப்பது?'' என்று சிந்தித்தான்.

அவனுக்குத் தன் ஊரிலிருந்த துறவி ஒருவரின் நினைவு வந்தது. எங்கும் தங்காமல் நேராக அவரிடம் சென்றான்.

அவரின் திருவடிகளில் விழுந்த உழவன் தன்னையும் தன் மனைவியையும் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினான்.

''கவலைப்படாதே'' என்று ஆறுதல் கூறிய அவர் நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் அவன் வாயிலாகக் கேட்டு அறிந்தார்.

துறவி என்ன செய்து அவர்களைக் காப்பாற்றி இருப்பார்?

RangaRakes
tamilnavarasam.com

32. காலக் கெடு மீறினால் உயிரைக் கொடு

பொய்கைத் தீவில் மணிமாறன் என்ற செல்வம் மிக்க வணிகன் இருந்தான். அவன் ஏழைகளிடம் மிகவும் அன்பாக இருந்தான். அவர்களுக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுத்து வந்தான்.

அதே தீவில் நரிக் கண்ணன் என்ற வணிகனும் இருந்தான். அவன் பேராசை பிடித்தவன். தன்னிடம் கடன் வாங்கியவர்களிடம் ஒன்றுக்குப் பத்தாக வட்டி போட்டு அவர்கள் சொத்தைப் பறித்துக் கொள்வான்.

அதனால் எல்லோரும் மணிமாறனைப் புகழ்ந்தும் நரிக் கண்ணனைப் பழித்தும் பேசி வந்தார்கள். பொறாமை கொண்ட நரிக் கண்ணன் மணிமாறனை ஒழிப்பதற்கு வாய்ப்பு தேடிக் காத்திருந்தான்.

ஒரு நாள், மணிமாறனின் வீட்டிற்கு அவன் ஆருயிர் நண்பனான எழிலரசன் வந்தான். மணிமாறனைப் பார்த்து, ''எனக்கும் மாணிக்க நாட்டு இளவரசிக்கும் விரைவில் திருமணம் நிகழ உள்ளது. மணப் பரிசாகத் தர ஏராளமான பணம் தேவைப் படுகிறது. திருமணம் முடிந்தவுடன் நாடு எனக்கு உரிமையாகி விடும். உடனே அப்பணத்தைத் திருப்பித் தந்து விடுகிறேன்'' என்றான்.

''நண்பனே! என் கப்பல்கள் அனைத்தும் விலை உயர்ந்த பொருள்களை ஏற்றிக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று உள்ளன. அவை திரும்பி வந்தால் நீ கேட்பதைப் போல் பல மடங்கு என்னால்

RangaRakes

உதவி செய்ய முடியும். இப்பொழுது என்னிடம் பணம் இல்லை. அதற்காக நீ கவலைப்படாதே. யாரிடமாவது கடன் வாங்கித் தருகிறேன்'' என்றான் மணிமாறன்.

உடனே அவனுக்கு நரிக் கண்ணன் நினைவு வந்தது. நேராக அவனிடம் சென்று தன் தேவையைச் சொல்லிக் கடன் கேட்டான்.

''நாம் இருவரும் வணிகர்கள். ஒருவருக்குச் சிக்கல் என்றால் இன்னொருவர் உதவி செய்ய வேண்டியது கடமை. நீ கேட்கும் பணம் தருகிறேன். வட்டி எதுவுமே எனக்கு வேண்டாம். பத்திரத்தில் குறிப்பிடப் படும் கால கெடுவிற்குள் நீ பணத்தைத் தந்துவிட வேண்டும். அப்படி நீ தரா விட்டால் உன் உடலில் இருந்து ஒரு கிலோ தசையை அரிந்து எடுத்துக் கொள்வேன். சம்மதமானால் கடன் தருகிறேன்'' என்று தேனொழுகப் பேசினான் நரிக் கண்ணன்.

தன் கப்பல்கள் எப்படியும் திரும்பி விடும் என்று நம்பிய மணிமாறன் பத்திரத்தில் கையொப்பம் இட்டுக் கடன் பெற்று நண்பனிடம் தந்தான்.

திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தது.

ஆனால், கப்பல் எதுவும் குறிப்பிட்ட காலத்திற்குள் தீவு வந்து சேரவில்லை.

'கெடு காலத்திற்குள் பணம் வரவில்லை. ஆகவே மணிமாறன் உடலிலிருந்து ஒரு கிலோ தசையை அரிந்து தர வேண்டும்' என்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தான் நரிக் கண்ணன்.

நடந்ததை எல்லாம் கேள்விப்பட்டான் எழிலரசன். பெரும் பொருளுடன் பொய்கைத் தீவு வந்தான். நரிக்

tamilnavarasam.com

கண்ணனைச் சந்தித்து, ''நீ கொடுத்த பணத்தைப் போல் பத்து மடங்கு தருகிறேன். வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்'' என்று மன்றாடினான்.

ஆனால் நரிக் கண்ணனோ, ''நீ நூறு பங்கு, ஆயிரம் பங்கு பணம் தந்தாலும் எனக்கு வேண்டாம். பகைவனான மணிமாறனின் உடலிலிருந்து ஒரு கிலோ தசைதான் வேண்டும்'' என்று உறுதியாகச் சொன்னான்.

தீர்ப்பு வழங்கும் நாள் வந்தது. ஒரு கையில் கத்தி ஒரு கையில் தராசுடன் மருத்துவரையும் உடன் அழைத்துக் கொண்டு நீதி மன்றம் வந்தான் நரிக் கண்ணன்.

''ஒப்பந்தப்படி மணிமாறனின் உடலிலிருந்து ஒரு கிலோ தசையை அரிந்து கொள்ளலாம்'' என்று தீர்ப்பு வழங்கினார் நீதிபதி.

குறுக்கிட்ட மணிமாறனின் வழக்கறிஞர், ''எதிரி ஒப்பந்தத்தில் உள்ளபடி ஒரு கிலோ தசையை அரிந்து எடுத்துக் கொள்வதில் எங்களுக்கு மறுப்பு இல்லை. எதிரியால் அப்படி நிறைவேற்ற இயலாவிட்டால் அவருக்கு நீதி மன்றம் கடுந்தண்டனை வழங்க வேண்டும்'' என்று புதுச் சிக்கலை எழுப்பினார்.

நரிக் கண்ணனால் ஒப்பந்தத்தில் உள்ளபடி ஒரு கிலோ தசையை அரிய முடியவில்லை.

நீதிபதி அவனுக்குச் சிறைத் தண்டனை விதித்தார்.

அப்படியானால் வழக்கறிஞர் எழுப்பிய சிக்கல் என்னவாக இருக்கும்?

RangaRakes

33. துப்பினால் துப்பு கிடைக்கும்

ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வீட்டில் ஆறு வேலைக்காரர்கள் இருந்தார்கள். எல்லோருமே நம்பிக்கைக்கு உரியவர்கள்.

செல்வரின் வைர மோதிரம் திடீரென்று காணாமல் போய் விட்டது. 'வேலைக்காரர்களில் எவனோ ஒருவன்தான் திருடி இருக்க வேண்டும்' என்று நினைத்தார் அவர்.

'எல்லா வேலைக்காரர்களையும் விசாரித்தால் நேர்மையான வேலைக்காரர்களும் வருந்துவார்களே. உண்மையான திருடனை எப்படிக் கண்டுபிடிப்பது?' என்று சிந்தித்தார்.

அவருக்குப் பக்கத்து ஊரிலிருந்த புகழ் பெற்ற மந்திரவாதியின் நினைவு வந்தது. எப்படியும் திருடனைக் கண்டுபிடித்து விடுவான் என்ற நம்பிக்கையில் அவனை வரவழைத்தார்.

மந்திரவாதியிடம் நடந்ததை எல்லாம் சொன்னார்.

மறுநாள் காலையில் மந்திரவாதி அங்கு பெரிய பூசை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். ஆங்காங்கே மண்டை ஓடுகள் வைக்கப்பட்டன. ஓம்! சூ! மந்திரக்காளி! என்று மந்திரத்தை உரக்க சொல்லியபடி இருந்தான்.

பூசை முடிந்தது. தன் முன் பணிவாக நின்றிருந்த ஆறு வேலைக்காரர்கள் கையிலும் வெவ்வேறு வண்ணம் உடைய அரிசிப் பொரியைத் தந்தான்.

tamilnavarasam.com

"இது சாதாரண பொரி அல்ல, மந்திரப் பொரி. இதை யாரும் உண்ணக் கூடாது. வாய்க்கு உள்ளேயே நன்கு மென்று பிறகு வெளியே துப்பிவிட வேண்டும். இந்தப் பொரி நன்றாக மெல்லப்பட்டதும் திருடியவனின் வாயைத் திறக்க முடியாமல் இறுகப் பிடித்துக் கொள்ளும்'' என்றான் மந்திரவாதி.

ஆறு வேலைக்காரர்களும் அந்த பொரியை வாயில் போட்டு மென்றபடி இருந்தனர். பிறகு ஒவ்வொருவராக வெளியே சென்று துப்பிவிட்டு வந்தனர்.

சிறிது நேரத்தில் மந்திரவாதி 'யார் திருடன்' என்பதைக் கண்டுபிடித்தான்?

திருடனைக் கண்டுபிடித்தது எப்படி?

34. மகிழ்ச்சியோடு சென்ற அரசன்

முன்னொரு காலத்தில் பவழத் தீவு என்ற நாட்டில் வினோதமான ஒரு வழக்கம் இருந்தது.

பட்டத்து யானை யாருக்கு மாலை போடுகிறதோ அவரே அந்நாட்டு அரசர் ஆகலாம். அவர் ஐந்தாண்டுக் காலம் அந்நாட்டைத் தன் விருப்பம் போல் ஆளலாம். என்ன நினைத்தாலும் செய்யலாம்.

அதன் பிறகு அவர் அந்நாட்டில் ஓடும் ஆற்றுக்கு மறுகரையில் உள்ள கொடிய காட்டில் தன்னந்தனியே விடப்படுவார். திரும்பவும் அவர் நாட்டிற்குள் வர முடியாது. அங்கே உள்ள கொடிய விலங்குகளுக்கு உணவாக வேண்டியதுதான்.

இப்படிப்பட்ட வழக்கத்தால் அந் நாட்டிற்கு யார் அரசரானாலும் முதல் மூன்று ஆண்டுகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். பிறகு தமக்கு ஏற்படப் போகும் முடிவை எண்ணிக் கவலையோடு காலத்தைக் கழிப்பார்கள்.

இந்த நிலையில் அறிவழகன் என்பவர் அந் நாட்டின் அரசர் ஆனார். அவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மகிழ்ச்சியாகவே இருந்தார். ஐந்தாண்டு முடியும் அந்த நாளும் வந்தது.

அவரை காட்டிற்குக் கொண்டுபோய் விடுவதற்காக வீரர்கள் வந்தனர். 'அரசர் அழுது புலம்புவார், கதறுவார்' என்று எதிர்பார்த்த எல்லோருமே ஏமாற்றம் அடைந்தனர்.

அரசர் வீரர்களோடு சிரித்துக் கொண்டே படகில் அமர்ந்தார். படகு அக்கரையை அடைந்தது. அவர் எந்தவிதக் கவலையும் இல்லாமல் மகிழ்ச்சியாக இறங்கிக் காட்டிற்குள் சென்றார்.

இவருக்கு முன் ஆட்சி செய்த அரசர்கள் எல்லாருமே அழுது புலம்பிச் சென்றனர். ஆனால் அறிவழகன் மட்டும் மகிழ்ச்சியாகச் சென்றது ஏன்?

35. தீர விசாரிப்பதே மெய்

நெடுங் காலத்திற்கு முன் பொதிகை நாட்டைச் செழியன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவியின் பெயர் கயற் கண்ணி. இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் மாலை நேரம், அரசனும் அரசியும் படுத்து உறங்கும் கட்டில் மெத்தையை வேலைக்காரன்

RangaRakes
tamilnavarasam.com

சரி செய்தான். மணம் மிகுந்த முல்லை மல்லிகை மலர்களைப் படுக்கையில் பரப்பினான். பிறகு இனிய மணம் வீசும் ஊதுபத்திகளை ஏற்றி வைத்தான். கடமையை நன்றாக முடித்து விட்டோம். எல்லாம் சரியாக இருக்கிறதா என்று மீண்டும் ஒருமுறை பார்த்தான்.

மெத்தையின் அழகும் நறுமணச் சூழலும் வேலைக்காரன் உள்ளத்தைக் கிறுகிறுக்க வைத்தன.

'அரசனும் அரசியும் இங்கே வருவதற்கு எப்படியும் நேரம் ஆகும். அதற்குள் சிறிது நேரம் நான் இதில் படுத்துத் தூங்கினால் என்ன?' என்று நினைத்தான். ஆவலை அடக்க முடியாத அவன் படுக்கையில் படுத்தான். நன்கு தூங்கி விட்டான்.

சிறிது நேரம் கழிந்தது. அரசி படுக்கை அறைக்குள் நுழைந்தாள். அறையின் மங்கலான வெளிச்சத்தில் படுக்கையில் படுத்திருப்பது அரசன்தான் என்று நினைத்து அவன் பக்கத்தில் படுத்து உறங்கி விட்டாள்.

கொஞ்ச நேரத்தில் அரசன் உள்ளே நுழைந்தான். படுக்கையில் இருவர் படுத்திருப்பது தெரிந்தது. நம் படுக்கையில் யார் படுத்து இருப்பார்கள் என்று விளக்கின் வெளிச்சத்தை அதிகப் படுத்தினான். அங்கே அரசியுடன் வேலைக்காரன் படுத்து இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

கோபத்தால் துடித்த அவன் ''உங்கள் இருவரையும் என்ன செய்கிறேன் பார்'' என்று கத்தினான்.

அரசனின் இடி போன்ற குரலைக் கேட்டதும் அரசியும் வேலைக்காரனும் விழித்துக் கொண்டனர்.

அப்பொழுதுதான் வேலைக்காரனுக்கு உண்மை புரிந்தது. 'தன்னை அரசர் என்று நினைத்து அரசியார் பக்கத்தில் படுத்துத் தூங்கி இருக்கிறார். இதைப் பார்த்த அரசர் தனக்கும் அரசியார்க்கும் கள்ளத் தொடர்பு என்ற ஐயத்தால் கோபமாக இருக்கிறார். எப்படியும் நம் உயிர் போகப் போகிறது. எந்தக் குற்றமும் செய்யாத அரசியாரையாவது காப்பாற்ற முயற்சி செய்வோம்' என்று நினைத்தான்.

அரசியோ அவமானத்தால் கூனிக் குறுகித் தலை கவிழ்ந்தபடி நின்றிருந்தாள்.

அரசனின் கால்களில் விழுந்த வேலைக்காரன், ''அரசே! ஏதோ ஆசையால் உங்கள் படுக்கையில் படுத்து விட்டேன். அதற்காக நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன். அரசியார் எனக்குத் தாய் போன்றவர். அரசராகிய தாங்கள் என்று எண்ணி என் பக்கத்தில் தெரியாமல் படுத்து விட்டார்கள். அவர்கள் மீது எந்தத் தவறும் இல்லை'' என்று கதறி அழுதான்.

கோபம் அடங்காத அரசன், ''என்னடா புதுக்கதை அளக்கிறாய். நீயும் அவளும் ஒரே படுக்கையில் இருந்ததை என் கண்களால் பார்த்தேன். கண்களை விடச் சிறந்த சாட்சி உண்டா? நீங்கள் இருவரும் நாளை தூக்கில் தொங்கப் போகிறீர்கள்'' என்று கத்தினான்.

நடந்ததை அறிந்த அமைச்சன் அரண்மனைக்கு ஓடி வந்தான்.

அரசனைப் பார்த்து, ''கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய். அதனால் நடந்தது என்ன என்று இருவரையும்

RangaRakes

tamilnavarasam.com

கேட்போம். தவறு இருந்தால் தண்டனை தருவோம்'' என்று அமைதியாகப் பேசினான்.

அமைச்சன் குறுக்கிட்டதை விரும்பாத அரசன் ''இருவரும் ஒரே படுக்கையில் இருந்ததை என் கண்களால் பார்த்தேன. என் கண்களை விட வேறு சாட்சிகளை உன்னால் தர முடியுமானால் இருவரும் குற்றம் அற்றவர்கள் என்று நிரூபி. இவர்களை மன்னித்து விடுகிறேன். இல்லையேல் நாளை நீயும் அவர்களுடன் தூக்கில் தொங்குவாய்'' என்று கோபத்துடன் கூச்சல் போட்டான்.

அரசியையும் வேலைக்காரனையும் தீர விசாரித்த அமைச்சன் இருவரும் குற்றம் அற்றவர்கள் என்று அரசன் ஏற்கும் வகையில் நிரூபித்தான்.

நடந்த உண்மையை அமைச்சன் எப்படி நிரூபித்து இருப்பான்?

36. எப்படிக் கண்டுபிடித்தாள்?

நிடத நாட்டு அரசன் நளன். அவன் அன்னப் பறவை ஒன்றின் மூலம் தமயந்தியின் அழகைப் பற்றி அறிந்தான். அந்த அன்னம் தமயந்தியிடம் சென்று நளனைப் பற்றிக் கூறியது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர்.

தமயந்தியின் உடல் வேறுபாட்டை அறிந்த தோழியர்கள் அவள் தந்தையாகிய அரசனிடம் சொன்னார்கள். அவனும் ஒரு நல்ல நாளில் தமயந்தியின் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தான்.

சுயம்வர ஓலை பெற்ற நளன் அவள் நாட்டை நோக்கிப் பயணம் ஆனான்.

தமயந்தியின் பேரழகையும் அவளுக்குச் சுயம்வரம் நடக்க இருப்பதையும் இந்திரன், வாயு, அக்கினி, இயமன் ஆகியோர் கேள்விப்பட்டனர். தங்களில் ஒருவரே அவளை மணக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பூவுலகு வந்தனர்.

நளன் மீது தமயந்தி காதல் கொண்டுள்ளாள் என்பதை அறிந்த அவர்கள் நளனை வழியில் சந்தித்தார்கள்.

அவனிடம், ''நீதான் எங்களுக்காகத் தமயந்தியிடம் தூது செல்ல வேண்டும். சுயம்வரத்தில் எங்களில் ஒருவரையே அவள் மணக்கும்படி வற்புறுத்த வேண்டும்'' என்று கூறி அவனுக்கு மாய உருவம் கொடுத்து அனுப்பினார்கள்.

அவ்வாறே யாரும் அறியாமல் தமயந்தியைச் சந்தித்தான் நளன். தான் யார் என்று சொன்னான். தன் காதலன் பேரழகனாக விளங்குவதைக் கண்டு தமயந்தி மகிழ்ச்சி அடைந்தாள்.

பிறகு நளன் தான் வந்த செய்தியைக் கூறினான். அவர்கள் நால்வரில் யாரேனும் ஒருவரை மணந்து கொள்ளும்படி வேண்டினான்.

ஆனால் தமயந்தியோ ''சுயம்வரத்தில் உங்களை அன்றி வேறு யாருக்கும் மாலையிட மாட்டேன் இது உறுதி'' என்றாள்.

தன் முயற்சி வெற்றி பெறாமல் திரும்பிய நளன் நடந்ததை அவர்களிடம் சொன்னான்.

RangaRakes tamilnavarasam.com

இதைக் கேட்ட தேவர்கள் நால்வரும், 'இனி சூழ்ச்சியால்தான் தமயந்தியை மணக்க வேண்டும்' என்ற எண்ணத்துடன் சுயம்வர மண்டபம் வந்தனர்.

மாலையுடன் மண்டபத்திற்குள் நுழைந்தாள் தமயந்தி. ஆனால் அங்கே நளனைப் போன்றே ஐவர் அமர்ந்து இருந்தனர். இதைக் கண்டு திகைத்தாள் அவள்.

'இவர்களில் ஒருவரே உண்மையான நளன். தேவர்கள் நால்வரும் என்னை ஏமாற்றுவதற்காக நளனைப் போல இங்கே அமர்ந்து உள்ளனர். நான் எப்படியும் உண்மையான நளனைக் கண்டுபிடித்து அவருக்கே மாலையிட வேண்டும்' என்று நினைத்தாள் தமயந்தி.

அறிவுக் கூர்மையுடைய அவள் சிறிது நேரத்தில் உண்மையான நளனைக் கண்டுபிடித்து அவனுக்கே மாலையிட்டாள்.

உண்மையான நளனை அவள் எப்படிக் கண்டுபிடித்து இருப்பாள்?

37. பிள்ளையாரைப் பிடிக்காத சனீசுவரன்

நவ கிரகங்களில் ஒருவரான சனீசுவரன் சிறு கடவுளாக இருந்தாலும் தனி ஆற்றல் வாய்ந்தவர். அவர் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் பிடித்துக் கொள்வார். அவர்களுக்குத் தாங்க முடியாத துன்பங்களை உண்டாக்குவார். அவர் பிடியிலிருந்து கடவுளர்கள் கூடத் தப்ப முடியாது.

ஒரு நாள், சனீசுவரன் 'தான் இதுவரை தொல்லை தராத கடவுள் யார்' என்று சிந்தித்தார். அவருக்குப் பிள்ளையார் நினைவு வந்தது.

'நம் வல்லமையைக் காட்டி அவருக்குத் துன்பம் தருவோம்' என்ற எண்ணத்தில் பிள்ளையாரிடம் சென்றார்.

சனீசுவரனை அன்புடன் வரவேற்றார் பிள்ளையார்.

"நான் உங்களைப் பிடிக்க வந்துள்ளேன். இப்பொழுது வேண்டாம் என்றால் பிறகு எப்பொழுது சொல்கிறீர்களோ அப்பொழுது வருகிறேன்" என்றார் சனீசுவரன்.

இவர் பிடியிலிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தார் பிள்ளையார். அருமையான வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

சனீசுவரனைப் பார்த்து, "இன்று வேண்டாம். நாளை வந்து என்னைப் பிடித்துக் கொள்ளும். இதை நாம் இருவரும் மீறாமல் இருக்க வேண்டும். அதனால், 'நாளை வந்து பிள்ளையாரைப் பிடித்துக் கொள்கிறேன்' என்று எழுதி கையொப்பம் இடும். நானும் அதன் கீழே கையொப்பம் இடுகிறேன்" என்றார்.

பிள்ளையாரின் சூழ்ச்சியை அறியாத சனீசுவரன் அப்படியே எழுதிக் கொடுத்தார்.

அப்படி எழுதிக் கொடுத்ததையே வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் பிள்ளையார்.

அதன் பிறகு சனீசுவரனால் பிள்ளையாரைப் பிடிக்கவே முடியவில்லை. ஏன்?

RangaRakes
tamilnavarasam.com

38. நெடுந் தூரம் குறுகல் ஆகுமா!

வெகு காலத்திற்கு முன் உருசிய நாட்டில் ஒரு கிழவனும் கிழவியும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். காட்டிற்குச் சென்று வேட்டையாடுவதே அவர்கள் தொழில், அவர்களுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். இளைஞனான அவனும் தந்தைக்குத் தன்னால் ஆன உதவிகள் செய்து வந்தான்.

ஓய்வு நேரத்தில் எப்பொழுதும் கிழவன் 'ஊக்கா' குழாய் வழியாகப் புகை பிடித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவன் மனைவி, ''நம் மகனுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. திருமணம் செய்யும் எண்ணமே உங்களுக்கு இல்லையா?'' என்று கேட்டாள்.

அதற்குக் கிழவன், ''நானும் அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நம் மகனை மணப்பவள் அறிவு உடையவளாக இருக்க வேண்டும். அதனால் நம் மகனை மணக்கும் உறவு முறைப் பெண்களை இங்கு அழைப்போம். அவர்கள் இங்கே சில நாட்கள் தங்கட்டும். நான் வைக்கும் அறிவுச் சோதனையில் எவள் வெற்றி பெறுகிறாளோ அவளே நமக்கு மருமகள் ஆகட்டும்'' என்றான்.

மகிழ்ந்த கிழவி உடனே செயலில் இறங்கினாள். இளைஞனை மணப்பதற்காக ஐந்து பெண்கள் அங்கு வந்தனர். அவர்கள் அனைவரும் அங்கேயே தங்கிக் கிழவனும் கிழவியும் மகிழும் வண்ணம் நடந்து கொண்டனர்.

எட்டாம் நாள் காலை, கிழவன் ஒவ்வொரு பெண்ணையும் தனியே அழைத்தான். அவர்களிடம், ''மரத்தால் ஆகிய சமையல் பாத்திரத்தை உடனே கொண்டு வா'' என்றான்.

இதைக் கேட்ட முதல் பெண், 'மரத்தால் ஆகிய சமையல் பாத்திரம் எப்படி இருக்க முடியும்? அப்படியே இருந்தாலும் அதை அடுப்பில் வைத்தால் தீப் பிடித்து எரிந்து விடுமே. இல்லாத ஒரு பொருளைக் கொண்டுவரச் சொன்ன இந்தக் கிழவனுக்கு அறிவே இல்லை' என்று நினைத்தாள்.

சிறிது நேரம் கழித்துக் கிழவனிடம் வந்த அவள், ''அப்படியொரு பாத்திரத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை'' என்று சொன்னாள்.

இப்படியே அடுத்து வந்த மூன்று பெண்களும் கூறி விட்டனர்.

கடைசியாக வந்த ஐந்தாவது பெண்ணிடமும் கிழவன் அதையே கேட்டான்.

அவள், 'சமையல் பாத்திரம் என்றால் நெருப்பையும் புகையையும் தாங்க வேண்டும். ஆனால் மரமோ நெருப்பில் எரிந்து சாம்பலாகி விடும். இந்தக் கிழவன் எதை மரத்தால் ஆகிய சமையல் பாத்திரம் என்று குறிப்பிடுகிறான் என்பது புரிய வில்லையே' என்று சிந்தித்தாள்.

அவளுக்குக் கிழவன் புகை பிடிக்கும் ஊக்கா குழாய் நினைவுக்கு வந்தது. ஆமாம், அந்தக் குழாய் மரத்தால்தான் செய்யப்பட்டு உள்ளது. புகையிலை நெருப்பைத் தாங்கும் வலிமை உடையது என்பதை அறிந்தாள் அவள்.

RangaRakes
tamilnavarasam.com

உடனே அவள் ஊக்கா குழாயை எடுத்துக்கொண்டு கிழவனிடம் வந்தாள்.

அவளது அறிவுக் கூர்மையைக் கண்டு மகிழ்ந்த கிழவன் தன் மகனுக்கும் அவளுக்கும் திருமணம் செய்து வைத்தான். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள், கிழவனும் அவன் மகனும் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குள் வெகு தூரம் சென்றனர். களைப்பு அடைந்த இருவரும் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். வீடோ நீண்ட தொலைவில் இருந்தது.

''மகனே! நாமோ களைப்பு அடைந்து விட்டோம். நீண்ட தூரமாக இருக்கும் இந்தச் சாலையைக் குறுகலாக ஆக்கு'' என்றான் கிழவன்.

இதைக் கேட்ட மகனுக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படி நீண்ட தூரமுள்ள சாலையைக் குறுகலாக்க முடியும்' என்று நினைத்த அவன் ஒன்றும் பேசாமல் இருந்தான்.

கோபம் கொண்ட கிழவன், ''இது கூடவா தெரியவில்லை'' என்று தன் மகனை அடித்துக் கொண்டே வந்தான். இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

தன் மனைவியிடம் நடந்ததை எல்லாம் சொன்னான் கிழவனின் மகன்.

இதைக் கேட்ட அவள் சிரித்துக் கொண்டே, ''நீண்ட தூரத்தைக் குறுகிய தூரமாக்க எளிய வழி ஒன்று உள்ளது. அடுத்த முறை உங்கள் தந்தை மீண்டும் இதையே சொன்னால் நான் சொல்கிறபடி செய்யுங்கள்'' என்று வழிமுறைகளைச் சொன்னாள்.

RangaRakes

மறுநாள் தந்தையும் மகனும் வேட்டைக்குச் சென்றனர். இருவரும் வீடு திரும்பும் போது கிழவன், ''இன்றாவது நீண்ட தூரத்தைக் குறுகலாக்கு'' என்றான்.

உடனே அவன் தன் மனைவி சொன்னது போலச் செய்தான். நீண்ட தூரம் குறுகிய தூரம் ஆயிற்று.

அவன் செய்தது என்னவாக இருக்கும்?

39. பரிசும் வேண்டும்! தரவும் கூடாது!

ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவரும் தந்தை சேர்த்து வைத்த சொத்துகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர். எஞ்சி இருந்தது ஒரு மாடுதான். அவர்கள் இருவருமே அழகான அந்த மாடு தனக்குத்தான் என்றார்கள். யாரும் இன்னொருவர்க்கு விட்டுத் தரத் தயாராக இல்லை.

இருவரும் அந்த மாட்டை அரசனிடம் ஓட்டிச் சென்று தங்கள் வழக்கைக் கூறினார்கள். மாட்டின் அழகைக் கண்ட அரசன் அதைத் தானே கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான்.

அவர்களைப் பார்த்து ''நான் உங்களை மூன்று கேள்விகள் கேட்கிறேன். நாளை காலைக்குள் உங்களில் யார் அதற்குச் சரியான விடை தருகின்றாரோ அவருக்கே 'இந்த மாடு உரியது. இருவருமே விடை தராவிட்டால் நான் மாட்டை எடுத்துக் கொள்வேன்'' என்றான்.

இருவரும், ''என்ன கேள்விகள்?'' என்று கேட்டனர்.

tamilnavarasam.com

அதற்கு அரசன், ''மனிதனின் வயிற்றை நிரப்புவதில் சிறந்ததாகக் கருதப்படுவது எது? அவனுக்கு மிகுதியான இன்பம் தருவது எது? மிக வேகமாகப் பயணம் செய்வது எது? இவைதான் என் மூன்று கேள்விகள்'' என்றான்.

இதைக் கேட்ட அண்ணன் இந்தக் கேள்விகளுக்கு எளிதாக விடை தந்து மாட்டைத் தானே அடையலாம் என்று நினைத்தான். தம்பியின் சிந்தனைக்கோ எந்த விடையும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்தோடு வீடு திரும்பினான்.

அவன் மகள், தன் தந்தை சோகமாக இருப்பதைக் கண்டு காரணம் வினவினாள். அவனும் நடந்ததை எல்லாம் சொன்னான்.

''தந்தையே! கவலைப் படாதீர்கள். நான் அரசனின் கேள்விகளுக்குச் சரியான விடை தருகிறேன்'' என்று சொல்லி விடைகளையும் சொன்னாள்.

மறுநாள் அரசவை கூடிற்று, அரசனை வணங்கிய அண்ணன், ''அரசே! மிகவும் சிறந்த உணவு தேன். மகிழ்ச்சியைத் தருவது பணம். வேகமாகச் செல்வது வேட்டை நாய்'' என்று பதில் தந்தான்.

அரசன் அந்த விடைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

பிறகு அரசனை வணங்கிய தம்பி, ''மனிதனின் வயிற்றை நிரப்புவதில் சிறந்ததாகக் கருதப்படுவது இந்தப் பூமிதான். ஏனென்றால் இந்தப் பூமியிலிருந்துதான் அவனுக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற முடிகிறது. வேகமாகச் செல்லக் கூடியது சிந்தனை. ஏனென்றால் நாம் நினைத்த மாத்திரத்தில் அது எங்கு வேண்டுமானாலும் செல்லும். மனிதனுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவது தூக்கம். ஏனென்றால் மனிதன் தூக்கத்திற்காக எதையுமே இழப்பானே தவிர எதற்காகவும் தூக்கத்தை இழக்க மாட்டான்'' என்று விடை தந்தான்.

''எல்லா விடைகளும் சரி'' என்று ஒப்புக் கொண்ட அரசன், ''என் கேள்விகளுக்குச் சரியான பதிலை உனக்குச் சொன்னது யார்?'' என்ற கேட்டான்.

தன் மகளே கூறியதாகச் சொன்னான்.

அதைக் கேட்ட அரசன் திகைத்தான். 'ஏழை உழவனின் மகள் தனக்கு இணையான அறிவு உடையவளாக இருப்பதா?'' என்று கோபம் கொண்டான்.

அவனைப் பார்த்து, ''உன் மகளை நாளை என்னை வந்து பார்க்கச் சொல், வரும் போது அவள் செருப்பு அணிந்தும் அணியாமலும் வர வேண்டும். மேலும் அவள் எனக்குப் பரிசு தந்தும் தராமலும் இருக்க வேண்டும். இதைச் செய்தால் உங்களுக்குப் பெரும் பொருள் பரிசாகக் கிடைக்கும். அப்படி இயல வில்லையானால் உங்கள் இருவரையும் கொன்று விடுவேன்'' என்றான்.

மறுநாள், அரசன் கூறியபடி அரண்மனைக்குச் சென்று நிறைய பரிசுகள் பெற்று வீடு திரும்பினாள் உழவனின் மகள்.

அவள் எப்படி அரசனைக் காணச் சென்றிருப்பாள்?

RangaRakes tamilnavarasam.com

40. கரிகாலன் வழங்கிய தீர்ப்பு

பல நூறு ஆண்டுகளுக்கு முன் சோழ நாட்டைக் கரிகாலன் என்ற சிறுவன் ஆண்டு வந்தான். அவன் சிறுவனாக இருந்த போதிலும் சிறந்த அறிஞனாக விளங்கினான். மக்களும் நேர்மையாளர்களாகவும் நல்லவர்களாகவும் வாழ்ந்தனர்.

அந்த நாட்டைச் சார்ந்த வயலூரில் ஒரு முதியவர் தன் மகளுக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்று கருதினார். அந்தச் செலவிற்காகத் தன் நிலத்தை விற்க முடிவு செய்தார்.

இன்னொரு முதியவரோ இளைஞனான தன் மகன் உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும் என்பதற்காக அந்த நிலத்தை விலைக்கு வாங்கினார்.

நிலத்தை வாங்கியவர் தன் மகனுடன் உழுது கொண்டிருந்தார். அப்பொழுது அந்த நிலத்தில் பெரும் புதையல் ஒன்று கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு நிலத்தை விற்றவரிடம் வந்தார்.

''இது உம் நிலத்தில் கிடைத்த புதையல். ஆகவே இது உமக்குத்தான் உரிமை உடையது. பெற்றுக் கொள்ளும்'' என்றார்.

ஆனால் விற்றவரோ, ''எப்போது நிலத்தை விலைக்கு வாங்கினீரோ அப்போதே அதில் வரும் பயன் அனைத்தும் உமக்கே உரியது. அதனால் அந்தப் புதையலை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்று மறுத்தார்.

வழக்கு ஊர்ப் பொது மன்றத்திற்கு வந்தது. புதையல் யாருக்கு உரியது என்று யாராலும் தீர்ப்பு வழங்க இயலவில்லை.

தீர்ப்பு வேண்டி இருவரும் அரசவைக்குச் சென்றனர். அங்கே அரியணையில் சிறுவனான அரசன் கரிகாலன் வீற்றிருந்தான்.

அவனைக் கண்டதும் இரு முதியவர்களும், 'பெரியோர்களால் தீர்த்து வைக்க முடியாத சிக்கலான வழக்கை இந்தச் சிறுவனா தீர்த்து வைக்கப் போகிறான்' என்று நினைத்தனர்.

வந்தவர்களின் முகத் தோற்றம் மாறியதைக் கண்டான் கரிகாலன். அவர்கள் உள்ளக் கருத்தை அறிந்தான். ''நீங்கள் ஏதோ வழக்குத் தொடர்பாக இங்கு வந்துள்ளீர்கள். நானோ சிறியவன். உங்கள் வழக்கை ஆராயும் தகுதி எனக்கு இல்லை. நீங்கள் இருவரும் மாலையில் இங்கு வாருங்கள். வயது முதிர்ந்த சான்றோர் ஒருவர் இந்த அரியணையில் அமர்ந்து உங்கள் வழக்கை ஆராய்ந்து நல்ல தீர்ப்பு வழங்குவார்'' என்றான்.

அரசன் சொன்னபடியே அன்று மாலை இருவரும் அரசவைக்கு வந்தனர். அங்கே அரியணையில் நரைத்த தாடியுடன் கிழவர் ஒருவர் வீற்றிருந்தார்.

அவரிடம் இருவரும் தங்கள் வழக்கைப் பற்றி விரிவாக எடுத்து உரைத்தனர்.

எல்லாவற்றையும் கேட்ட அந்தக் கிழவர், இருவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நல்ல தீர்ப்பினை வழங்கினார்.

மகிழ்ந்த இருவரும் முதியவரை வணங்கினார்கள். உடனே அந்த முதியவர் தன் வேடத்தைக் கலைத்தார். அங்கே சிறுவன் கரிகாலன் இருந்தான்.

எல்லோரும் அரசனின் அறிவைப் புகழ்ந்தனர்.

சிறுவன் கரிகாலன் வழங்கிய நல்ல தீர்ப்பு என்னவாக இருக்கும்?

★ ★ ★

RangaRakes

tamilnavarasam.com

விடைகள்

1. **சரியாய்ச் சொல்வார் சாலமன்:** பூந்தோட்டத்தில் பறந்து கொண்டிருந்த தேனீக்களில் ஒன்றாவது உள்ளே வராதா என்ற எண்ணத்தில் சன்னல்களைத் திறந்துவிடச் சொன்னார் சாலமன். எதிர்பார்த்தபடியே அங்கு வந்த தேனீக்களில் ஒன்று நடுவில் உள்ள மலரில் மட்டும் அமர்ந்து தேன் குடித்தது. அதனால் அந்த மலரே உண்மையான மலர் என்று கண்டுபிடித்தார் சாலமன்.

2. **விந்தையான விலங்கு:** அந்த விந்தையான விலங்கு மனிதன். குழந்தைப் பருவத்தில் தவழ்வதால் காலையில் நான்கு கால், பிறகு நடப்பதால் நண்பகலில் இரண்டு கால், முதுமையில் தடியை ஊன்றி நடப்பதால் மாலையில் மூன்று கால்.

3. **டயோடலசின் அறிவுக் கூர்மை:** மெல்லிய நூலால் கட்டப்பட்ட எறும்பைச் சங்கின் ஒரு துளையின் வழியே உள்ளே அனுப்பினான். பிறகு நூல் மட்டும் உள்ளே போகும்படியும் எறும்பு அந்தத் துளையின் வழியே வெளியே வராதபடியும் செய்தான். மறுதுளையின் வெளிப்பகுதியில் தேன் துளி ஒன்றை வைத்தான். தேனை முகர்ந்த எறும்பு அதை உண்ண அத்துளை வழியே வெளியே வந்தது கட்டப்பட்ட நூலிலிருந்து எறும்பை விடுவித்தான் டயோடலசு. இப்பொழுது சங்கிற்குள் நூல் கோர்க்கப்பட்டு இருந்தது.

4. **சாலமனின் அறிவுரை:** ''நீ வெறும் பெருமைக்காகவும் ஆடம்பரத்திற்காகவும் விருந்து வைத்தாய். இனிமேலாவது சாலமன் சொன்னது போல ஊராரிடம் உண்மையான அன்பு செலுத்திப் பார். உன்னிடமும் அவர்கள் உண்மையான அன்பு காட்டுவார்கள்'' என்றார் பெரியவர். அதன்படி நடந்த அவனும் ஊராரின் அன்பைப் பெற்றான்.

5. **ஆயுளை இரட்டிக்க எளிய வழி:** ''இந்திரன் தந்த அரியணையில் அமர்ந்து ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்யும் வரத்தை நீர் பெற்றுள்ளீர். அதனால் ஒவ்வோர் ஆண்டும் ஆறு மாதம் மட்டும் இதில் அமர்ந்து நீர் ஆள வேண்டும். மீதி ஆறு மாதம் வேறு யாரிடமாவது ஆட்சியை ஒப்படைத்து விட்டுக் காட்டிற்குச் செல்ல வேண்டும். இப்படிச் செய்தால் அந்த வரத்தின்படி உம்மால் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ முடியும்'' என்பதே பட்டி கூறிய அறிவுரை.

இதுவே, விக்கிரமாதித்தன் 'நாடாறு மாதம், காடாறு மாதம்' ஆண்ட கதை.

6. **யாருக்கு உரியவள்?** மலர்விழிக்கு உயிர் கொடுத்த இளைஞன் தந்தை முறை ஆகிறான். எலும்புகளை ஆற்றில் முழுக்காட்ட எடுத்துச் சென்றவன் மகன் முறை ஆகிறான். எனவே பாதுகாத்த முதலாம் இளைஞனே கணவன் முறை ஆகிறான். அதனால் அவனே அவளைத் திருமணம் செய்து கொள்ளும் உரிமையைப் பெறுகிறான்.

7. **தியாகத்திற்குப் போட்டி:** அரசனுக்காகத் தம் மனைவி மக்களைத் தியாகம் செய்வது உலகத்தில் அவ்வப்பொழுது நிகழ்கின்ற செயல்தான். அதனால் வீர நிலவனின் செயலை மிகச் சிறந்த தியாகம் என்று கூற இயலாது. வேலைக்காரர்களுக்காகத் தன் உயிரை விடத் துணிந்த அரசனின் செயலே மிகச் சிறந்த தியாம் எனலாம்.

8. **சோதிடமா? மந்திரமா? வீரமா?** எழிலரசியைக் காப்பாற்ற சோதிடனும் மந்திரவாதியும் துணை நின்றனர். உண்மையில் காப்பாற்றியது வீரனே. ஆகவே அவனே எழிலரசியை மணக்க வேண்டும்.

9. **தலையை மாற்றில் நிலையே மாறும்:** உருவத்தை விட உணர்வே இன்றியமையாதது. இருவரில் யார் அவளை மனைவியாக நினைத்து அழைக்கின்றாரோ அவரே அவளுக்குக் கணவனாக வேண்டும்.

RangaRakes

10. **யார் நுட்பமானவர்?** படுக்கையில் படுத்தவனே மிகவும் நுட்பமான உணர்வு உடையவன். ஏனென்றால் சிறிய தலைமுடி ஒன்று அவன் உடலில் காயத்தை ஏற்படுத்தி உள்ளது. மற்ற இருவரும் வேறு எப்படியோ கூட அந்தப் பெண்ணைப் பற்றியும் சோற்றைப் பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பு உண்டு.

11. **மென்மையானவர் யார்?** வெறும் உலக்கை ஒலி கேட்டுக் கைகள் கன்றிப் போனவனே மிகவும் மென்மையானவன். மற்ற இருவரும் அவளுக்கு ஒப்பானவர்கள் இல்லை. ஏனென்றால் தாமரைப் பூ விழுந்ததாலும் நிலவொளி பட்டதாலும் தொடர்பு கொண்டதன் காரணமாகவே இருவருக்கும் காயமும் கொப்புளமும் ஏற்பட்டன.

12. **அரசனுக்குத் திருமணம்! அமைச்சனுக்கு மரணம்!** 'ஓரளவு அழகுடைய அரசிக்காகவே ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் கவனிக்காதவன் அரசன் மணிமாறன். இப்பொழுதோ பேரழகி ஒருத்தியைத் திருமணம் செய்து உள்ளான். இனி அவன் ஆட்சியைக் கவனிக்காமல் அந்தப்புரமே கதியென்று கிடக்கப் போகிறான். இந்தத் திருமணத்திற்குத் தெரிந்தோ தெரியாமலோ நானே காரணமாகி விட்டேன். மக்கள் என்னைத்தான் மீண்டும் தூற்றப் போகிறார்கள்' என்று நினைத்து மனம் உடைந்து இறந்தான் அமைச்சன்.

13. **ஏன் அழுதான்? ஏன் சிரித்தான்?** 'இந்த வணிகன் எனக்காகத் தன் செல்வம் அனைத்தையும் இழக்கத் துணிந்தானே! இவனுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன், என்று நினைத்து அழுதான்.

'இந்தப் பெண் அரசர்களையே திருமணம் செய்ய மறுத்தவள். கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட திருடனாகிய என் மேல் காதல் கொண்டாளே! பெண்களின் உள்ளத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியாது' என்று நினைத்துச் சிரித்தான்.

14. **எது அரிய செயல்?** வீரன், வணிகன், மனைவி, மூவரும் இயல்பான அன்பின் காரணமாக இறந்து இருக்கலாம் ஆனால் பொருளை மட்டுமே விரும்பும் விலைமகள் இவர்களுக்காக உயிரை விட்டதே அரிய செயல்.

15. **நான்கு முட்டாள்கள்:** முதல் மூன்று முட்டாள்களின் செயலினால் யாருக்கும் எந்தத் தீங்கும் இல்லை. ஆனால் புலியின் உடல் உருவாகி உள்ளது என்ற தெரிந்தும் அதற்கு உயிர் கொடுத்த நான்காமவனே மிகப் பெரிய முட்டாள். அவனால்தான் நால்வரையுமே புலி கொன்று தின்றது.

16. **என்ன முறை சொல்லி அழைப்பது?** விடை கூற இயலாத புதிர்.

17. **மூன்று தட்டில் நால்வர்க்கு விருந்து:** அமைச்சனின் தங்கைதான் அந்நாட்டு அரசி.

18. **யார் மணமகன்?** ''மரத் துண்டிற்குப் பெண் வடிவம் கொடுத்தவன் தந்தை முறை ஆகிறான். உயிர் கொடுத்தவன் கடவுள் ஆகிறான். ஆடை அணிவித்தவன் சகோதரன் முறை ஆகிறான். அணிகலன்களைத் தந்தவன் கணவன் முறை ஆகிறான். ஆகவே பொற்கொல்லனே அவளை மணம் செய்து கொள்ள வேண்டும்'' என்றார் முனிவர்.

19. **இருவருக்கும் ஒரே சாட்சி:** ''முன்னால் பார்த்தால் மணியகாரர் குதிரை போலவும் பின்னால் பார்த்தால் முரடனின் குதிரை போலவும் தெரிகிறது'' என்று இருவர் பக்கமும் சாட்சி சொன்னான் அவன்.

tamilnavarasam.com

முன்னால் என்பது முதலில் மணியகாரரிடம் இருந்த குதிரை என்றும் பின்னால் என்பது வால் வெட்டப்பட்ட பிறகு முரடன் குதிரையாகி விட்டது என்பதையும் அவன் பேச்சிலிருந்து குறிப்பாக உணர்ந்த அரசன் முரடனைத் தண்டித்தான்.

20. பேயை விரட்ட எளிய வழி: "என் மனைவி விளக்குமாற்றைக் கையில் எடுத்துக்கொண்டு என்னைத் துரத்திக் கொண்டு ஓடி வருகிறாள். நான் அவளுக்குப் பயந்துதான் இங்கே ஓடி வந்தேன்" என்றான்.

அதைக் கேட்டு, "என்ன உன் மனைவியா? இங்கேயா?" என்று அச்சத்துடன் சொல்லிய பேய், உடனே இளவரசியை விட்டு நீங்கி எங்கோ ஓடிப் போயிற்று.

21. காலையில் செய்தால் தப்பு! மாலையில் செய்தால் உவப்பு! "காலையில் அவன் மற்றொருவனிடம் அடிமையாக இருக்கும் பெண்ணைப் பார்க்கிறான். அவன் செயலைச் சட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை.

நண்பகலில் அவன் அவளை விலைக்கு வாங்கி விடுகிறான். உரிமையாளன் அடிமையைப் பார்க்கலாம். அதனால் அவன் செயலைச் சட்டம் ஒப்புக் கொள்கிறது.

மாலையில் அவன் அவளை விடுதலை செய்து விடுகிறான். உரிமை பெற்ற பெண்ணை இன்னொருவன் பார்ப்பது தவறாகும். அதனால் இப்பொழுது அவன் செயலைச் சட்டம் மறுக்கிறது.

இரவுத் தொடக்கத்தில் அவன் அவளைத் திருமணம் செய்து கொள்கிறான். அப்பொழுது அவளைப் பார்ப்பதைச் சட்டம் ஏற்றுக் கொள்கிறது.

நள்ளிரவில் அவளை விவாக ரத்து செய்ய எண்ணுகிறான் அவன். அதனால் அப்பொழுது அவன் அவளைப் பார்ப்பது தவறாகிறது.

மறுநாள் காலையில் அவன் அவளை மீண்டும் திருமணம் செய்து கொள்கிறான். இப்பொழுது அவன் பார்ப்பதைச் சட்டம் ஒப்புக் கொள்கிறது" என்று விளக்கம் தந்தார் அலிஇப்னு.

22. சிக்கலுக்கு மேல் சிக்கல்: "கணவனையே ஒரு பெண் அடிமையாகப் பெற்றால் அப்பொழுதே அவர்கள் திருமணம் சட்டப்படி ரத்தாகி விடுகிறது. ஓர் அடிமையைப் பெற்ற அப்பெண் உரிமை பெற்றவள் ஆகிறாள். உரிமை பெற்ற அவளை உடனே மணக்கச் சட்டப்படி எந்தத் தடையும் இல்லை" என்று கூறிய அலி யூசுப் இருவர்க்கும் திருமணம் செய்து வைத்தார்.

23. விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்: "அரசே! இன்று சூரிய கிரகணம். கதிரவனை இராகு என்ற பாம்பு விழுங்கி விட்டது. அதனால் இப்பொழுது தாங்கள் எனக்குப் பரிசு கொடுப்பதைத் தடுப்பவர் யாரும் இல்லை. தாங்கள் சொன்னபடி ஆயிரம் பொற்காசுகளைப் பரிசாகத் தாருங்கள்" என்றான் புலவன்.

24. புகழ்ச்சியா? இகழ்ச்சியா? "வேருள்ள கழி என்பது கரும்பைக் குறிக்கும். அதாவது உங்கள் செயல் கரும்பைப் போல் இனிமையானது என்பது முதலாமவன் கருத்து.

முள்ளும் முரடும் என்பது வெளிப்பகுதியில் முட்களும் அதற்கு அடுத்துச் சக்கைகளும் உள்ள பலாப் பழத்தைக் குறிக்கும். உங்கள் செயல் பலாச் சுளை போல் இனிப்பானது என்பது இரண்டாமவன் கருத்தாகும்.

கல்லும் கரடும் என்பது கற்கண்டைக் குறிக்கும். உங்கள் செயல் கற்கண்டைப் போல் இனிமையாக உள்ளது என்பது மூன்றாமவன் கருத்து" என்று விளக்கம் தந்தார்.

25. இளவரசியை மணப்பவர் யார்? மூவர் பொருளுமே இளவரசியைக் காக்கப் பயன்பட்டாலும், மற்ற இருவர் பொருள்கள் அப்படியே உள்ளன. மாம்பழம் பெற்றவன் மட்டும் தன் பொருளை இளவரசிக்காக முழுமையும் இழந்து விட்டான். ஆகவே அவனே இளவரசியைத் திருமணம் செய்யத் தகுதி உடையவன்.

26. கடுக்கன் திருடியது யார்? ஒருவன் தன் வலது காதுக் கடுக்கன் திருடு போய் விட்டது என்கிறான். இன்னொருவனோ இடது காதுக் கடுக்கன் திருடு போய் விட்டது என்கிறான். எல்லோரும் வலது காது தரையில் படும்படிதான் தூங்கினார்கள். ஆகவே வலது காதில் உள்ள கடுக்கனை யாரும் திருட முடியாது. ஆகவே வலது காதுக் கடுக்கனை இழந்ததாகச் சொன்னவனே திருடன் என்று நீதிபதி கண்டுபிடித்தார்.

27. உண்மையான அரசன்: அமைச்சன் அரசவைக்குள் நுழைந்ததும் அங்கு வழக்கத்திற்கு மாறாக அமைதி நிலவியதைக் கண்டு ஐயம் கொண்டான். அரியணையில் வீற்றிருந்தவன் உட்பட அவையில் இருந்த அனைவரும் அமைச்சன் வேடத்தில் இருந்த அரசனையே பார்த்துக் கொண்டிருந்தனர். அதனால் அவனே உண்மையான அரசன் என்று கண்டுபிடித்தான் அந்த அறிவுள்ள அமைச்சன்.

28. கடலைக் கண்டு அஞ்சியவன்: "அரசே! அந்த வீரன் முன்பின் கடலைப் பார்த்து அறியாதவன். அதனால் கடல் அலைகளால் படகு மேலும் கீழும் ஆடுவதைக் கண்டு மிகவும் கலங்கி விட்டான். வீரர்கள் அவனைக் கடலில் தூக்கிப் போட்டதும் அவனுக்குக் கடலின் தன்மையும் அதிலிருந்து தன்னைக் காப்பாற்றக் கூடியது படகு என்ற உண்மையும் தெரிந்தது. ஆகவே மீண்டும் படகுக்கு வந்ததும் அமைதியாக இருக்கிறான்" என்ற விளக்கம் தந்தான் அமைச்சன்.

29. எப்படி இறப்பது? "அரசே! நான் முதுமை வந்து இயற்கையாக இறக்க விரும்புகிறேன்" என்றான் இசைக் கலைஞன்.

30. எவ்வளவு நேரம் ஆகும்?: "எப்படிப்பட்ட வேகத்தில் நடக்கிறாய் என்பது தெரிந்தால்தான் என்னால் எவ்வளவு நேரத்தில் நீ மதுரையை அடைய முடியும் என்று சொல்ல முடியும். அதனால்தான் உன்னை நடக்க விட்டுச் சொல்லேன்" என்றான் கிழவன்.

31. தங்கினால் நீ! இல்லையேல் மனைவி!: 'வழியில் உழவன் தங்கினால் என்ன செய்வானோ அதையே அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் அவன் மனைவி செய்ய வேண்டும். அப்படி என்ன செயல் உள்ளது?' என்று துறவி சிந்தித்தார்.

'உழவன் கையிலிருந்த பலகாரப் பாத்திரத்தைப் பார்த்தார். வழியில் அவன் தங்கினால் பலகாரம் உண்பான். வீட்டிற்குச் சென்றால் அவன் மனைவி பாத்திரத்தைத் திறப்பாள். ஆகவே அந்தப் பாத்திரத்திற்குள்தான் அவர்கள் உயிரைக் குடிக்கும் எமன் இருக்க வேண்டும்' என்று முடிவு செய்தார்.

'உழவன் ஆல மர நிழலில் உறங்கிய பொழுது பலகார மணத்தினால் இழுக்கப்பட்ட பாம்பு ஒன்று பாத்திரத்திற்குள் நுழைந்திருக்க வேண்டும். உழவனும் அதை அறியாமல் பாத்திரத்தை மூடி இருக்க வேண்டும்' என்று நினைத்தார்.

வீரர்களை விட்டுப் பாத்திரத்தைத் திறக்கச் சொன்னார். பாம்பு சீறிக் கொண்டு வெளியே வந்தது. வீரர்கள் அதைக் கொன்றனர்.

32. காலக் கெடு மீறினால் உயிரைக் கொடு: 'ஒப்பந்தத்தில் இரத்தத்தைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப் படவில்லை. என் கட்சிக்காரரின் ஒரு சொட்டு ரத்தம் கூட

RangaRakes

tamilnavarasam.com

வீணாகாமல் எதிரி தசையை அரிந்து எடுத்துக் கொள்ளலாம்' என்ற சிக்கலை எழுப்பினார் வழக்கறிஞர்.

33. **துப்பினால் துப்பு கிடைக்கும்:** வேலைக்காரர்கள் பொரியைத் துப்பிய இடத்தைப் பார்த்தான் மந்திரவாதி. அவர்களில் ஒருவன் மட்டும் பொரியை மெல்லாமல் அப்படியே துப்பி இருந்தான். அவனே திருடன் என்று கண்டுபிடித்தான் மந்திரவாதி.

34. **மகிழ்ச்சியோடு சென்ற அரசன்:** 'என்ன வேண்டுமானாலும் தன் ஆட்சிக் காலத்தில் செய்யலாம்' என்பதை அறிவழகன் பயன்படுத்திக் கொண்டான்.

ஆட்சிக்கு வந்த உடனே ஆற்றின் அக்கரையில் அரண்மனையையும் கோட்டை கொத்தளங்களையும் கட்டச் செய்தான். பலரை அங்கே குடி அமர்த்தினான். அதனால் ஐந்தாண்டு முடிந்ததும் அவன் மகிழ்ச்சியாகச் சென்றான்.

35. **தீர விசாரிப்பதே மெய்:** ''அரசே! மெத்தையை நன்கு பாருங்கள். அரசியும் வேலைக்காரனும் படுத்திருந்த இடத்தில் இருந்த மலர்கள் மட்டும் அவர்கள் படுத்து இருந்ததால் நசுங்கி உள்ளன. இருவருக்கும் நடுவிலும் பிற இடங்களிலும் உள்ள மலர்கள் நசுங்காமல் புதிதாக உள்ளன. இருவரும் தவறாக இருந்து இருப்பார்களானால் மெத்தையில் உள்ள எல்லா மலர்களும் கசங்கி இருக்க வேண்டும். இதனால் இருவரும் குற்றம் அற்றவர்கள் என்பது தெளிவாகிறது'' என்றான் அமைச்சன்.

36. **எப்படிக் கண்டுபிடித்தார்கள்?** இந்திரன், வாயு, அக்கினி, இயமன் ஆகிய நான்கு தேவர்களின் கண்கள் இமைக்காமலும் கால்கள் தரையில் படாமலும் இருப்பதைத் தமயந்தி கண்டாள். அதனால் அவர்களைத் தேவர்கள் என உணர்ந்து உண்மையான நளனுக்கே மாலை இட்டாள்.

37. **பிள்ளையாரைப் பிடிக்காத சனீசுவரன்:** சனீசுவரன் ஒவ்வொரு நாளும் பிள்ளையாரைப் பிடிக்கச் சென்றார். ஆனால் பிள்ளையாரோ, முன் அவர் எழுதியதைப் படிக்கச் சொன்னார். 'நாளை வந்து பிடித்துக் கொள்கிறேன்' என்று தான் எழுதியதைப் படித்து சனீசுவரன் ஏமாற்றத்துடன் திரும்பி விடுவார்.

இதனால், சனீசுவரனால் பிள்ளையாரை என்றுமே பிடிக்க முடியவில்லை.

38. **நெடுந் தூரம் குறுகல் ஆகும்?** ''இனிமையாகப் பாடிக் கொண்டும சுவையாகப் பேசிக் கொண்டும் எவ்வளவு தூரம் நடந்தாலும் களைப்புத் தோன்றாது. அதைத்தான் உங்கள் தந்தையார் 'நீண்ட தூரத்தைக் குறுகலாக்கு' என்று குறிப்பாகச் சொன்னார்'' என்றாள் அவன் மனைவி. தன் மனைவி சொன்னபடியே அவன் நடந்தான். இருவரும் களைப்பின்றி வீடு வந்து சேர்ந்தனர்.

39. **பரிசும் வேண்டும்; தரவும் கூடாது** அந்தப் பெண் ஒரு காலில் செருப்பு அணிந்தும் ஒரு காலில் செருப்பு அணியாமலும் சென்றாள். இது அரசன் கூறியபடி அணிந்தும் அணியாமல் இருப்பது ஆகும். அவள் தன்னுடன் ஒரு சிட்டுக் குருவியைப் பரிசாக எடுத்துச் சென்றாள். அதை அரசனிடம் தருவது போலப் பறக்க விட்டாள். அக்குருவியும் பறந்து மறைந்தது. இது, பரிசுப் பொருள் கொண்டுவந்தும் கொண்டுவராத செயல் ஆகும்.

40. **கரிகாலன் வழங்கிய தீர்ப்பு:** ''உங்கள் இருவரின் மக்களுக்கும் திருமணம் செய்து வைத்து மணப் பரிசாகப் புதையலை அவர்களிடமே தந்துவிட வேண்டும்'' என்று தீர்ப்பு வழங்கினான் கரிகாலன்.

★ ☆ ★

RangaRakes tamilnavarasam.com